# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

அக்டோபர் 2009 ஜீவியம் 15 மலர் 6

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| மறுப்பு | 3 |
| லைப் டிவைன் | 6 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 14 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 15 |
| சாவித்ரி | 20 |
| முனைந்து செய்யும் காரியம் | 22 |
| அன்பர் கடிதம் | 27 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 29 |
| அஜெண்டா | 35 |
| பூரண யோகம் - முதல் வாயில்கள் | 37 |
| லைப் டிவைன் - கருத்து | 42 |
| மனிதனும் மிருகமும் | 44 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

எது ஆயிரம் முறை மனத்தை அரிக்கின்றதோ அதன்பின் ஆண்டவன் உள்ளான். அரிப்பதை அகற்றினால் அன்னை தரிசனம் தருவார்.

ஆயிரமாண்டை அரை நிமிடமாக்கும் அன்னையை அழைக்க மனம் வருவதில்லை. நினைவும் வருவதில்லை. அழைக்க நினைப்பதே அருள்.

வெறும் மனிதன் காண்பது எண்ணவோட்டம். சிந்திப்பவன் காண்பது சிந்தனை. சிந்தனை நின்றால் அகந்தை தெரியும். அகந்தையைக் கடந்தால் ஆன்மா தெரியும்.

ஆன்மா அதே நிமிடம் முடிக்கும். அவசரம் ஆன்மா அறியாதது. அடுத்த நிமிடம் ஆன்மா அறியாதது.

## இம்மாதச் செய்தி

**நினைவு எழும்பொழுதெல்லாம்**

**சமர்ப்பணமான பிரச்சினை**

**கரையும்.**



# மறுப்பு

N. அசோகன்

நம்மிடையே பல பேருக்கு மறுத்துப் பேசக்கூடிய குணம் இருப்பதைக் காணலாம். ஆங்கிலத்தில் இதை நெகட்டிவிசம்என்று கூறுவார்கள். அதிலும் குறிப்பாக, சிலபேர் எதையும் மறுத்துப் பேசுவார்கள். இப்படிபட்டவரிடம் அவர் முன்பு நம்மிடம் சொன்ன கருத்தை இப்பொழுது அவரிடம் நினைவுப்படுத்தினால் அதையும் இப்பொழுது மறுத்துப் பேசுவார். இப்படி மறுத்துப் பேசும் குண விசேஷத்தினுடைய மூலம் என்ன, அதன் இயற்கை என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*அறிவில் தெளிவு பிறப்பதற்குமுன்னால் மனதில்*
*குழப்பம் எழும். குழப்பத்திலிருந்து மறுப்பு எழும்.*

ஆகவே மறுத்துப் பேசுவது சிந்திப்பதின் துவக்கம்என்று சொல்லலாம். இந்த மறுத்துப் பேசும் குணத்திற்கு ஓர் உச்சக்கட்டம் உண்டு. அதாவது வாழ்நாள் முழுவதும் தேடிய விஷயம் கைக்கூடி வரும்பொழுது அதையும் வேண்டாம்என்று சொல்லக்கூடிய இடமும் மனிதனிடம் உண்டு. இதற்கும் காரணங்கள் உண்டு.

1) தேடிவரும் அதிர்ஷ்டத்தையும் வேண்டாம் என்பவர்களுடைய பிறப்பிலேயே தரித்திரம் நிரம்பி இருக்கும்.
2) பெரும்பதவிக்கு ஆசைப்பட்டவர் அது கூடிவரும்பொழுது அதற்குண்டான, அப்பதவிக்குண்டான நிர்வாகத்திறன் தம்மிடம் இல்லையென்று உள்ளூர உணர்ந்திருப்பார்.
3) ‘வேண்டாம்’ என்று மறுப்பதிலும் ஒரு ருசி இருக்கிறது.
4) இது மனிதசுபாவத்தில் உள்ள ஒரு முக்கிய அம்சமாகும்.

ஒரு பட்டப்படிப்புப் படித்த இளைஞர்க்கு அப்படிப்பை முடிக்கும் முன்னரே வேலை கிடைத்தது. இருந்தாலும் இந்த வேலை வேண்டாம் என்று சொல்லிவிட்டு மேற்படிப்பைத் தொடர்ந்தார். அதை முடித்துக் கொண்டு Gazette நிலையிலுள்ள officer வேலையை நாடினார்.

1970இல் ரூ.650/- சம்பளத்துடன் அப்பதவியும் கிடைத்தது. இவருடன் கூட படித்தவர்கள் எவரும் இத்தகைய உயர்ந்த Gazette பதவிக்கு வரவில்லை. அவருடைய வாழ்க்கை லட்சியமே ரூ.1,000/- சம்பளத்தை எட்ட வேண்டும் என்பதாகதான் இருந்தது. ஆனால் அந்தச் சம்பளம் சர்க்கார் பணியில் கிடைப்பதற்கு அப்போது வாய்ப்பில்லை. ஆனால் Tea மற்றும் Coffee எஸ்டேட்டுகளில் மானேஜராகப் பணிபுரிபவர்களுக்குமட்டும் அந்த வாய்ப்பு இருந்தது. இருந்தாலும் இந்தச் சம்பளத்திற்காக சர்க்கார் வேலையை விட்டு விட்டு எவரும் Tea Estateற்குப் போகவும் மாட்டார்கள். இவர் தம்முடைய படிப்பை 1950இல் முடித்திருந்தார். 1970வரை ஏதேனும் புதுவேலைக்கு விண்ணப்பம் செய்து கொண்டேயிருந்தார். இப்பொழுது கடைசி முயற்சியின்பொழுது சர்க்காரிலேயே 2000/- ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. கேட்டது கிடைத்தாலும் உள்ளூர இதை ஏற்றுக் கொள்வதற்கு அவருக்குத் தயக்கம். அதனால் 1300/- ரூபாய் சம்பளம் கிடைக்கக் கூடிய வேறு ஒரு புதிய சர்க்கார் வேலையில் சேர்ந்தார். மெடிக்கல் certificate வாங்கிக் கொடுக்க வேண்டியதாயிற்று. அவரைப் பரிசோதித்த Doctorரோ இதயம் பலகீனமாக இருக்கிறதுஎன்று எழுதிவிட்டார். வேறு ஒரு டாக்டரிடம் காண்பித்து அப்படி ஒன்றும் கோளாறு இல்லைஎன்று வேறு ஒரு certificate வாங்கி வந்தார். ஆனால் சர்க்காரோ இரண்டாவது டாக்டர் கொடுத்த certificateஐ மறுத்து முதல் டாக்டர் கொடுத்த certificate அடிப்படையில் வேலையில்லைஎன்று கூறிவிட்டது.

*விரும்பியது கைக்கூடி வரும்பொழுது ஆழ்மனதிற்கு*
*அதை ரத்து செய்யும் குணம் உண்டு.*

Hound of Heaven என்ற ஓர் ஆங்கிலக் காவியம் உண்டு. பக்தன் ஆண்டவனை அடைய வேண்டும்என்று வேண்டுகிறான். அவனுடைய வேண்டுதலுக்கு இணங்கி ஆண்டவனும் அவனைத் தேடி வருகிறான். ஆனால் அப்படித் தேடி வரும்பொழுது பக்தனோ ஆண்டவனிடம் அகப்படாமல் இங்கும் அங்கும் ஓடி ஒளிகிறான். அவனைச் சமாதானம்செய்து இறுதியில் ஆண்டவன் அவனைத் தன்னிடத்திற்கு அழைத்து போகிறான்.



ஆசை மேலிடும்பொழுது மனிதன் தன் நிலைமைக்கு மீறிக் கேட்கிறான். பல பேருக்குக் கிடைப்பதில்லைஎன்றாலும் ஒரு சிலருக்குக் கிடைக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில் கேட்டவர்கள் மறுப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஜாதகத்தில் தரித்திர அம்சம் உள்ளவர், அம்மாதிரியே ஜாதகத்தில் தரித்திரம் அமைந்த பெண்ணை மணந்து இருந்த சொத்தை இழந்தார். அப்படி இழந்ததையும் காப்பாற்றி அதிர்ஷ்டம் அவர் வாழ்க்கையில் மலர்ந்தபொழுது வேண்டாம்என்று விலக்கினார். வேறொரு தொழிலுக்கு வந்தார். அதில் அவர் போட்ட முதலை இரண்டே வருடங்களில் அருள் 30 மடங்காக உயர்த்தியது. என்ன நினைத்தாரோ தெரியவில்லை இதுவும் வேண்டாம்என்று விலகிப் போனார். The Life Divine படிப்பதால் தொழிலில் 800 மடங்கு அபிவிருத்தி வந்தபொழுதும், வறண்டு போயிருந்த வாழ்க்கை மலர்ந்த பொழுதும், பிடித்த சனியன் விலகியபோதும், எதைத் தீவிரமாகத் தேடினோமோ அது கைமேல் கிடைத்தபொழுதும் வேண்டாம்என்று மறுத்தவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள்.

*மறுப்பு மனிதசுபாவம்.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வேலையிருந்தால் உறவு நீடிக்கும். உணர்வால் நட்பு நீடிப்பதில்லை. ஏனெனில் அடுத்தவரை ஆளும் நினைப்பு எப்பொழுதும் வரலாம். அக்குறையில்லாவிட்டாலும் உணர்வின் தீவிரம் குறைந்தால் நட்பு மறையும். தீவிரம் சற்று நேரத்திற்கு மேலிருக்காது.

***உறவு நீடிக்க வேலை அவசியம்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIX. Life

Page No.175
Para No.5

Mind is manifested here.
It is manifested in a specialisation of Force.
We give it the name of Life.
What then is Life?
What relation it has to Supermind?
It is the supreme trinity of Sachchidananda.
It is active in creation.
It does so by means of the Real-Idea.
Real-Idea is Truth Consciousness.
From what principle does it take its birth?
Or, by what necessity?
It is divine or undivine?
Is it the necessity of Truth or the illusion?
How does it come into being?
Life is an evil rings down the centuries.
It is the ancient cry.
It says life is a delirium, a delusion, insanity.
We have to flee from life.



## 19. வாழ்வு

மனம் இங்கு வெளிப்படுகிறது.
ஒரு சிறப்பான சக்தியில் மனம் வெளிப்படுகிறது.
அதை நாம் வாழ்வு என்கிறோம்.
வாழ்வுஎனில் என்ன?
அதற்கும் சத்தியஜீவியத்திற்கும் என்ன தொடர்பு?
சச்சிதானந்தத்தின் திருமூர்த்தியது.
அது சிருஷ்டியில் வேகமாகச் செயல்படுகிறது.
அதன் பெயர் முழு-எண்ணம்.
முழுஎண்ணம்என்பது சத்தியம்-ஜீவியம்.
எந்த தத்துவத்திலிருந்து அது பிறக்கிறது?
என்ன அவசியம் அது ஜனிப்பதற்கு?
அது தெய்வீகமானதா இல்லையா?
அது சத்தியத் தேவையா? மாயையின் தேவையா?
அது எப்படி உற்பத்தியாயிற்று?
வாழ்வு கொடியதுஎன ஆயிரமாயிரம் ஆண்டாகக் கேள்விப்படுகிறோம்.
இது பன்னெடுங்காலக் குரல்.
வாழ்வு ஜன்னி, மாயை, பயித்தியம்என அது கூறுகிறது.
வாழ்வை நாம் துறக்கவேண்டும்.

We must seek the repose of eternal being.
Is it so?
Why then is it so?
Why has the Eternal wantonly inflicted this evil?
Why has he brought this delirium or insanity upon Himself?

He has done so upon the creatures.
These are the creatures brought into being by Him.
His all-deluding Maya is terrible.
Or, is it rather some divine principle?
Does it express itself like that?
There are countless worlds of the universe.
Millions and millions of forms of life people these universes.
Is there a power of the Delight of the eternal being?
Has it to express as evil?
Has it thrown itself into Time and Space?
Here is the constant outburst of these worlds.

Let us study this Life as it manifests upon earth. Page No.176
Its basis is matter. Para No.6
It is a form of the one cosmic Energy.
We observe that.
It is a dynamic movement.
Life is a current of this movement.
It is positive and negative.
It is a constant act.
Or, it is a play of the Forces.
It builds up forms.
It energises them by a continual stream of stimulation.
It maintains them.



பிரம்மத்தில் நாம் நிம்மதி தேட வேண்டும்எனக் கூறுகிறது.
இது இப்படியா?
ஏன் இது இப்படி?
ஏன் பிரம்மம் வேண்டுமென தீமையை நமக்களிக்கிறது?
இந்த ஜன்னியையும் சித்த பிரமையையும் ஏன் பிரம்மம் தனக்கே பரிசாக அளிக்கிறது?
இவ்வுலக ஜீவராசிகளுக்கு அது பிரம்மத்தின் பரிசு.
இந்த ஜீவராசிகள் பிரம்மத்தால் சிருஷ்டிக்கப்பட்டவை.
எல்லாவற்றையும் ஏமாற்றும் மாயை பயங்கரமானது.
அல்லது இது ஏதாவது தெய்வீக தத்துவமா?
அத்தத்துவம் இப்படி வெளிப்படுகிறதா?
இப்பிரபஞ்சத்தில் ஏராளமான லோகங்கள் உள்ளன.
கோடிக்கணக்கானபேர் அங்கு வசிக்கின்றனர்.
பிரம்மஜீவனில் ஆனந்தசக்தி ஏதேனும் உண்டா?
அது தீமையாக வெளிப்பட வேண்டுமா?
அது காலம்-இடத்தில் இப்படித் தோன்றுகிறதா?
ஏராளமான லோகங்கள் இப்படி உற்பத்தியாகின்றன.

பூமியில் வெளிப்படும் வாழ்வை நாம் ஆராய்வோம்.
இதன் அடிப்படை ஜடம்.
பிரபஞ்ச சக்தியின் ஓர் உருவம் இது.
நாம் இதைக் காண்கிறோம்.
இது தீவிரமாகச் செயல்படும் சக்தி.
வாழ்வு இந்த சக்தியின் ஓட்டம்.
இது இருபுறத்திலும் வேலை செய்யும்.
இது தொடர்ந்த செயல்.
சக்தியின் லீலை இது.
இது உருவங்களைப் படைக்கிறது.
அவற்றை உற்சாகப்படுத்தி சக்தியளிக்கிறது.
அவற்றை வெளிப்படுத்துகிறது.

It is by an unceasing process of disintegration and renewal of that substance.
Process of life requires disintegration of substance.
Also it needs renewal of substance.
It needs maintenance of form and change of form.
They all are the constant process of life.
Death is merely a rapid disintegration.
It is subservient to the necessity of life.
It is a necessity of change.
It is a variation of formal experience.
The body dies.
But there is no cessation of life.
The material of one form is broken up.
It serves as material for another form.
It is another form of life.
There is in the bodily form a mental energy.
It is psychic energy.
It is also not destroyed.
It only breaks out from one form.
It assumes other forms.
It is by a process of metempsychosis.
It is a new ensouling of body.
This is the uniform law of Nature.
Now we are sure of this Law.
All renews itself.
Nothing perishes.

There is one all pervading Life. Page No.176
It is a dynamic energy. Para No.7
It is a consequence of that Law.



இது முடிவற்ற செயல். பொருளைக் கரைத்து மீண்டும் உற்பத்தி செய்யும் வேலை இது.
வாழ்வு வளர பொருள் கரைய வேண்டும்.
பொருளை மீண்டும் உற்பத்தி செய்ய வேண்டும்.
ரூபத்தைக் காப்பாற்ற வேண்டும், மாற்ற வேண்டும்.
வாழ்வு தொடர்ந்து வளரும் வழிமுறைகள் இவை.
மரணம் வேகமாக உடல் கரைவது.
வாழ்வு நிலைபெற மரணம் அவசியம்.
இந்த மாற்றம் அவசியமானது.
நம் வழக்கமான அனுபவம் இதன் மூலம் மாறுகிறது.
உடல் அழிகிறது.
உயிர் அழிவதில்லை.
ஒரு ரூபத்தின் பொருள் உடைகிறது.
அடுத்த ரூபத்தின் பொருளாக அது உதவுகிறது.
இது அடுத்த வாழ்வு.
உடலின் உருவத்தில் மனோ சக்தியுண்டு.
இது சைத்தியபுருஷனின் சக்தி.
இதுவும் அழிவதில்லை.
இது ஒரு ரூபத்திலிருந்து உடைத்து வெளிவருகிறது.
இது அடுத்த ரூபங்களை ஏற்கிறது.
மனம் பெறும் புதுஉருவம் இம்முறை.
உடலுக்குப் புதிய ஆத்மா எழும் முறை.
இது இயற்கையின் மாறாத சட்டம்.
இந்த சட்டம் நமக்குத் தெளிவாக ஏற்க முடிகிறது.
அனைத்தும் தங்களைப் புதுப்பிக்கின்றன.
எதுவும் அழியவில்லை.

அனைத்தையும் ஊடுருவும் வாழ்வுண்டு.
இது தீவிர சக்தி.
இந்தச் சட்டத்தின் முடிவு இது.

Now it could be affirmed.
(Its outermost movement is its material aspect).
This energy creates all forms.
They are forms of the physical universe.
It is Life imperishable and eternal.
It would go on existing even after the abolition of the universe.
It is capable of producing a new universe in its place.
It can be held back in a state of rest.
It can be done by a higher power.
Otherwise it will inevitably go on creating.

If so, Life is a Force.
It is a Force that builds and maintains forms in the world.
It also destroys forms.
Life will be nothing but that.
It is Life that manifests itself in the form of the earth.
Life is there as much as in the plant that grows in it.
Life is there in the animals too.
They support the existence of the plants.
The animals devour the life force of the plant.
Or the plant and the animals devour each other.
All existence here is universal.
It is universal Life taking form of Matter.
It hides life-process in physical process.
Later it emerges as submental sensitivity.
It is mentalised vitality.
Yet, it would be throughout the same creative Life principle.

*Contd…*

❀ ❀ ❀



இப்பொழுது இதை வலியுறுத்தலாம்.
(இதன் புறரூபம் ஜடத்தின் அம்சம்.)
சக்தி அனைத்து ரூபங்களையும் உருவாக்குகிறது.
இவை ஜடப்பிரபஞ்சத்தின் ரூபங்கள்.
அழியாத வாழ்வு அனந்தனுக்குரியது.
பிரபஞ்சம் அழிந்தபின்னும் இது தொடர்ந்திருக்கும்.
இதனிடத்தில் புதிய பிரபஞ்சத்தை இதனால் ஏற்படுத்த முடியும்.
இதை அசைவற்ற நிலையில் பிடித்து நிறுத்த முடியும்.
இதை செய்வது பெரிய சக்தி.
இல்லையெனில் புதிய பிரபஞ்சங்களை இது தொடர்ந்து
சிருஷ்டித்தபடியிருக்கும்.
வாழ்வுஎனில், அது ஒரு சக்தி.
உலகில் ரூபத்தை உற்பத்தி செய்து ஆதரிப்பது வாழ்வு.
அது ரூபங்களை அழிக்கவும் செய்யும்.
வாழ்வுஎன்பது அது தவிர வேறெதுவுமில்லை.
வாழ்வுஎன்பது பூமியாக வெளிப்பட்டது.
பூமியில் வாழும் செடியில் வாழ்வுள்ளது.
விலங்கிலும் வாழ்வுள்ளது.
விலங்கு தாவரத்தை ஆதரிக்கிறது.
விலங்கு தாவரத்தைச் சாப்பிடுகிறது.
விலங்கும் தாவரமும் ஒன்றையொன்று விழுங்கும்.
இங்கு வாழ்வுஎனில் பிரபஞ்சத்திற்குரியது.
அது ஜடமாக உருவாகும் பிரபஞ்ச வாழ்வு.
வாழ்வை அது ஜடத்தில் மறைக்கிறது.
பின்னர் அது மனத்திற்குக் கீழ்ப்பட்ட உணர்வாக வெளிவரும்.
அது உணர்வு பெற்ற மனத்தின் கதிர்.
இருந்தாலும், அது முழுவதும் சிருஷ்டிக்கும் வாழ்வெனும் சட்டமாகும்.

*தொடரும்….*

❀ ❀ ❀

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

111. *அதிகமான நம்பிக்கை ஏமாற்றமளிக்கும்.*

✡ **வளரும் நம்பிக்கை வளரும் ஆத்மாவுக்குரியது.**

112. *நல்லது நடக்கும்என்று நம்பு.*

✡ **நல்லதைமட்டும் நடக்க வைக்கும் தெம்பு நம்முடையது.**

113. *உடல்நலக்கேடு ஆத்மாவின் நலமாகலாம்.*

✡ **உடல்நலக் கேட்டை மருந்தில்லாமல் குணப்படுத்தினால் ஆத்மா வாய் திறந்து பேசும்.**

114. *வாழ்வின் இனிப்புச் சுவை மகிழ்வே.*

✡ **அன்பு ஞானம் பெறுவது இனிப்பு.**

115. *அதிக மகிழ்ச்சி நிலைப்பதில்லை.*

✡ **அதிக மகிழ்ச்சி யோக அடிப்படை.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சக்தி (force) தன்னையறிய ஈஸ்வரன் சக்திக்குப் (Shakti) பணிகிறான். பரிணாமத்தைத் துவங்க அவன் செய்வது அது. அதன் மூலம் பரிணாமம் பூர்த்தியாகிறது.

***ஈஸ்வரன் சரணாகதியால் பூரணம் பெறுகிறான்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **எந்தக் கெட்டதும் - அல்பம், கருமித்தனம், கோபம், etc. - பர்சனாலிட்டியைச் சிறியதாக்கும்.**

நல்லதும் கெட்டதும் கலக்கும்பொழுது பலன் எப்படி மாறுகிறது என அனுபவத்தில் பார்க்க வேண்டும்.

சில சட்டங்கள்:

i. கெட்டதைமீறி நல்லது பலிக்கும். நல்லது அதிகமானால் அப்படியிருக்கும்.

ii. கெட்டது அதிகமானால் நல்லதைமீறி காரியம் கெடும்.

iii. நல்லதோ, கெட்டதோ அளவுக்குத் தகுந்தவாறு (proportionate) பலன் தரும்.

iv. ஆயிரம் கெட்டதைமீறி ஒரு நல்லது பலன் தரும்.

v. ஆயிரம் நல்லதைமீறி ஒரு கெட்டது கெடுக்கும்.

vi. திறமை அதன் அளவுக்கு (proportionate) பலன் தரும்.

vii. Values - கற்பு, விஸ்வாசம், மானம் - பூரணமானால்தான் 100% இருந்தால்தான் பலன் தரும்.

viii. நம் வாழ்வில் பலன் செய்த அளவுக்குண்டு.

ix. நமக்கு உயர்ந்த நிலையில் பலன் பெற 100% சுத்தம் தேவை.

x. நாம் 8 லெவல் வழியாக உயருகிறோம். எட்டாவது அன்னை.

அங்கு, சிறிய முயற்சிக்குப் பிரம்மாண்டமான பெரிய பலனுண்டு. சிறு தவறுக்குப் பெருநஷ்டம் வரும்.

அனுபவம் முடிவானது.

அதுவும் அறிவைப் பொருத்தது.

நம்பிக்கையும் மூடநம்பிக்கையாக இருக்கும்.

அடி மடத்தனமும் அற்புதமான பலனைத் தரும்.

இவற்றிலும் அடிப்படைச் சட்டங்கள் மாறா.

4) இது உள்மனத்தின் ஆழ்ந்த பகுதி - Substance - ரிஷிக்குரியது.

இது பெரும்பலன் தரும். பெருமுயற்சிக்குப் பெரும்பலன்.

கர்மம் கரையும் நிலையிது. எதுவும் க்ஷணத்தில் நடக்கும்.

இது போன்றவை நம் வாழ்வில் நடந்தவை மறந்து போகும்.

இப்பொழுது நடப்பது கண்ணில் படாது.

சேல்ஸ்மேன் 1500ரூபாய் சம்பளம் பெற்றவன், MLA ஆகிவிட்டான்.

5) அடிமனம் - அதன் மேற் பகுதி Consciousness.

ஒன்று 100ஆகும்நிலை. அகந்தை அழிந்த நிலை. சிந்தனை நின்று மெய் மறந்து செயல்படும் நிலை. மெய்மறந்து லயத்திலிருப்பது 4ஆம் நிலை. மெய்மறந்து செயல்படுவது 5ஆம் நிலை.

- **உலகம் பாராட்டும் நிலை.**
- **(Causeless joy), காரணமில்லாமல் வரும் சந்தோஷம்.**
- **ஆழ்ந்த வருத்தத்தை உயர்ந்த சந்தோஷமாக்கும் திறன்.**

பெரிய கேஸைத் தோற்ற அன்பர் அன்று இரவில் பல முறை எழுந்து உட்கார்ந்து வாய்விட்டுச் சிரித்தார். முடிவாக அவருக்குப் பூரண வெற்றி கிடைத்தது.

எல்லோருடைய வாழ்விலும் ஓரளவு நடந்திருக்கும். மறந்து போய்விடும்.

6) அடிமனம் - ஆழ்ந்த பகுதி - Substance.

மனம் உலகம் முழுவதும் பரவும்.

நமக்கு நடந்தது அனைவருக்கும் நடப்பது எல்லா அன்பர்கட்கும்



உண்டு. இது பெரிய நிலை. இதை நம் வாழ்வுக்குப் பயன்படுத்த கட்டுப்பாடு (discipline) தேவை.

7) கிருஷ்ணபரமாத்மா, ஸ்ரீ அரவிந்தர் நிலை.

& இந்நிலைகளும் நம் வாழ்வைத் தொடுவதுண்டு.

8) இப்படி நல்லது நடந்தால் மேலே பூச்சி விழுவதை உதறுவதுபோல் உதறிவிடுகிறோம்.

**நடந்தவற்றை நினைவுபடுத்தி இப்பொழுது பாராட்ட வேண்டும்.**

அன்பர்கள் (Devotees) வாழ்வில் இது போன்றவை நடக்காமலிருக்காது.

ஒரு விஷயத்தை நினைவுபடுத்தி உயிர்ப்பித்தால் புதுவாழ்வு பிறக்கும்.

அனுபவம் அறிவாக மாறுவது திறமை பலன் தருவது.

நடந்ததை நடந்ததாக அறிவது அறியாமை.

நடந்த நல்லதும், கெட்டதும், நல்லதுஎன்பது ஞானம்.

அது ஒரு விஷயத்தில் இப்பொழுது நினைவு வந்து மாறுவது அதிர்ஷ்டம்.

அப்படி அனைத்தையும் மாற்றும் திறன் அருள்.

அருள் பெற்று, 7, 8 நிலையைச் சற்று அடைவது அருளைப் பேரருளாக மாற்றுவது.

10,000 ரூபாய் வசூல் செய்ய நினைத்ததைப் பெறவேண்டியவர் கேலி செய்தார். கேலி செய்தால் பலிக்காது. கேலியைமீறிப் பலிப்பது அருளன்று; பேரருள். அது 20,000 ரூபாயானது பேரருள் பெருகுவது. அது 2 லட்சமானது ஆசிரமச் சாதகர் வாழ்வில் கேட்டறியாதது.

- பணம் சாதிக்காததை மனம் சாதிக்கும்.
- மனம் சாதிக்க முடியாததை மனத்தின் மணம் சாதிக்கும்.
- பிறரை மனம் ஏற்காது, ஏற்றால் போற்றாது. பிறரை ஏற்றுப் போற்றிப் பாராட்டினால் அது தனக்காக இருக்கும். பிறரைப் பிறருக்காக ஏற்றுப் போற்றிப் பாராட்டி மகிழ்வது மனித சுபாவத்திலில்லை. அதைச் செய்யும் கணவனும், மனைவியும்,

பெற்றோரும், பிள்ளைகளும் 'எங்கள் குடும்பத்தை' எளிதாக்குவர்.

## ✡ அன்னை ஒரு சூட்சும ஸ்தாபனம் (Mother is an institution)

❀ வீட்டைவிட்டு வெளியேறிய பையனை நாம் கண்டுபிடிக்க முடியாது.

போலீஸ் எல்லா ஊர்களிலுமிருப்பதால் - அது ஒரு ஸ்தாபனம் - அவர்களால் எளிதாகக் கண்டுபிடிக்க முடியும்.

அன்னையெனும் ஸ்தாபனம் உலகெங்கும் உள்ளது.

அது சூட்சுமத்திலும் உள்ளது.

பிரபஞ்ச முழுவதும் உண்டு.

தலைமைஆபீஸ் - மதர் - பெறும் செய்தி ஸ்தாபனம் முழுவதும் பரவும்.

போலீஸுக்கு நேரம் தேவை.

அன்னைக்கு (Internet போல) நேரம் தேவையில்லை.

காணாமற் போனதைக் கண்டுபிடிப்பதுமட்டும் போலீஸ் வேலை.

நியூயார்க்கில் உள்ள பொருளை வாங்க போலீஸ் உதவாது.

அமேஸான் (Amazon) கம்பெனி உலகில் எங்கும் உள்ள புத்தகம் வாங்க உதவும்.

அன்னை எங்குள்ள எந்த வேலை செய்யவும் உதவுவார்.

இல்லாததை உற்பத்தி செய்ய உதவுவார்.

பிள்ளை ராமானுஜமாக அதே அன்னைஸ்தாபனம் உதவும்.

திறமையை ஏற்படுத்த இந்த ஸ்தாபனம் உதவும்.

அதற்குரிய விண்ணப்பத்தைப் (application) பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

**நம் அறிவு, அனுபவம், கற்பனை, கற்பனைக் கருவூலத்திற்கு எட்டிய எதையும் பூர்த்தி செய்ய அன்னை செயல்படுவார். எட்டாதது முடியவும் அன்னை செயல்படுவார்.**

இதைத் தத்துவமான முறையில் அறியலாம்.



அனுபவமாக அறியலாம்.

தத்துவத்தைப் போதிக்கும் அனுபவமாக அறியலாம்.

அறிவு வெளிப்படும் அனுபவமாகக் காணலாம்.

**காண விரும்புவது அதிர்ஷ்டம், காண்பது அருள்.**

அது வாழ்வில் அன்னையை அறிதல்.

புரியாத எதுவும், புரிய முடியாத எதுவும் புரிவதைப் பார்க்கலாம்.

அது மனத்தில் அன்னையைக் காண்பது.

ஆத்மாவில் அறிவதுஎன்பது இதுவரை எவரும் பெறாத ஆன்மீக அனுபவம் பெற அன்னைஸ்தாபனம் உதவும்.

Westerners are physical. மேல் நாட்டார் உடலால் வாழ்பவர்.

Indians are spiritual. இந்தியருக்கு ஆன்மீகம் உண்டு.

புளகாங்கிதம் ஆன்மீகத்தின் (spirituality) முடிவான கட்டம்.

அது இந்தியருக்குண்டு.

அது உள்ளவருக்கு அவர் அதைப் பாராட்டினால் இல்லாதது இல்லை.

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கண்டு பிடித்தால் சந்தோஷம். சிக்கலாக மறைந்தால் சந்தோஷம் அதிகமாகும். தன்னை மறந்து தனக்கெதிரான ஜீவியத்தில் விழுங்கப்படுவதே அதிகபட்சமாக மறைவ-தாகும்என்பதால் அங்கு தன்னைக் கண்டு கொள்வது அதிகபட்ச ஆனந்தமாகும்.

***மறைந்து மறப்பதே லீலையின் ஆனந்தம்.***

## P.105 Figures are there undreamed by mortal mind

### மனித மனம் கனவு காணமுடியாத உருவங்கள் உள்ளன

- ✡ உலகமறியாத உன்னத உடல்கள்
- ✡ அகக்கண்ணின் ஞானநிஷ்டையில் சஞ்சாரம்
- ✡ புனிதனின் நடை இதயத்தைக் கொள்ளை கொள்ளும்
- ✡ இவ்வற்புத லோகத்தை ஆட்கொள்ள சொர்க்கத்தை வேண்டும்
- ✡ எதிர்கால அதிசயம் உலவும் இடைவெளி
- ✡ பழையதும் புதியதும் செப்பனிடப்படும் பாதாளம்
- ✡ அழகின் அற்புதக் காட்சி குவியும் சிகரம்
- ✡ இலட்சிய திருஷ்டியின் மந்திர உலக மாயை
- ✡ தனிமையின் உயர்வு தன்முன் கொள்ளும் கூடம்
- ✡ ஜடமும் ஆன்மாவும் விழிப்புற்று சந்தித்த இடம்
- ✡ காதலர் உள்ளம் கலந்த தனிமையின் இரகஸ்யம்
- ✡ பாசத்தின் வேகம் பற்றி அணைத்த பாங்கு வெளியிடாத துர்அதிர்ஷ்டம்
- ✡ வலிமையும் இனிமையும் ஆனந்தமாகப் பெற்ற அரவணைப்பு
- ✡ உயர்வும் தாழ்வும் ஒன்றுபடும் உலகம்
- ✡ அரூபனின் அளவுகடந்த ராஜ்ய தூதன்
- ✡ ஜடஇருளின் ராஜ்யம் எல்லையை இழந்தது
- ✡ உடலை நோக்கித் தாவும் ஆன்ம எழுச்சியின் வீழ்ச்சி
- ✡ உலகின் ஆடை உருவிய நிலை
- ✡ பிறப்பையும் இறப்பையும் கடந்த வாழ்வு



- ✡ மோட்சரூபம் பள்ளத்தாக்கை எழுப்ப வந்து
- ✡ அழியாத அமரத்துவ மரணமிலா வாழ்வின் போர்வை
- ✡ அணிபவனின் அற்புதப் பேரொளி அம்சமான நிலை
- ✡ காலத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பொறுக்கும் தகுதி
- ✡ ஆத்மஜோதி கலந்த ஆடையெனும் அணிகலன்
- ✡ ஜடம் பொருளாகிப் பெற்ற அடையாளக்குறியின் சக்தி
- ✡ மனத்தின் லேசான வெளி கற்பனை செய்த வெறுமை
- ✡ மனம் எழுப்பிய அச்சிட்ட மாயையின் தத்துவம்
- ✡ மண்ணில் பிறந்த மண் அறியாத உணர்வு
- ✡ கனத்த உடலைவிட நிஜமான நிலை
- ✡ மரணமெனும் ஆடை மறைந்த மாயம்
- ✡ எழுந்து உயர ஏற்ற லேசான உடல்
- ✡ உன்னதச் சூழல் ஊர்ந்து வந்து தந்த ஸ்பர்சம்
- ✡ மருள் மண்டிய பழைய திட்டம் வழுக்கி வீழ்ந்தது
- ✡ சேறு சிதைக்கும் பிடியை அழிக்கும்
- ✡ உலகப்பெருவெளியில் ஆத்ம யாத்திரை.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உள்ளத்தில் தயாராகி, வெளியே பலன் தருவது வேலை. அகவுணர்வைவிட, புறச்செயல் நீண்ட காலத்துப் பிரச்சினையை எழுப்பும். பிரச்சினையின் அளவு செயல், உணர்வை மீறுவதால் நிர்ணயிக்கப்படும்.

*புறம் அகத்தை மீறுவது பிரச்சினை.*

# முனைந்து செய்யும் காரியம்

கர்மயோகி

சுறுசுறுப்பானவர் (dynamic) காரியத்தை முனைந்து செய்வார்கள். அவர்கள் செய்வது பலிக்கும். உலகம் அவரைத் திறமைசாலியெனப் போற்றும். ஆசை உயிரை ஆட்கொண்டு ஆர்வமாக செயல்படுபவர் காரியம் அனைத்தும் பிசுத்துப்போகும். உலகம் அவரைப் பேராசைக்காரன்எனக் கொள்ளும். தன் கடமையைப் பிறர் உணர்த்தி செயல்படுபவர் காரியம் மனநிறைவு தரும்படிப் பூர்த்தியானபொழுது, ‘‘எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் சொல்லியதால் செய்தேன். எதிர்பாராதபடி ஏராளமாகப் பூர்த்தியாயிற்று’’ என்பார். பல நாள் திட்டமிட்டு மெனக்கெட்டு முயன்று முனைந்து செய்த காரியம் எதிர்பார்த்தபடி நிறைவேறுகிறது. மூன்று வருஷமாக எடுத்த மூன்று முயற்சி பலிக்காமல் கைவிட்டபொழுது அடுத்த உயர்ந்த கட்டத்தில் அற்புதமாக பலிக்கிறது.

ஒரு காரியத்தில் ஆசை வந்தால் அது ஆர்வமாகும். காரியம் மட்டும் நினைவிருக்கும். க்ஷணம் தரிக்காமல் செயல்படுவோம். அனைவரும் வேண்டாம்என்பதைச் செய்வோம். காரியம் கெட்டுப் போனபின் அடுத்தவரைக் குறைகூறுவோம். அடுத்த முறையும் இதையே செய்வோம். இது மனிதசுபாவம். Mrs.பென்னட் இதை மட்டும் தொடர்ந்து முழுமூச்சுடன் செய்து கூடிவந்த திருமணத்தைக் கெடுத்தார். சிறுபெண் ஓடும்படியாயிற்று. மற்றவர் பெருமுயற்சியால் கெட்டது விலக்கப்பட்டபின்னும் அதையே வற்புறுத்திச் செய்கிறார். பொறாமையால் மிக வேண்டியவருக்குக் கெடுதல் செய்தவர் முனைப்பாகச் செயல்பட்டார். முனைப்பு முதலில் வெற்றி பெற்றது. பிறகு தலைகீழாகப் போயிற்று. எவருக்குக் கெடுதல் செய்தாரோ, அவரை வணங்கி முனைந்து நாடி நட்புக் கொண்டாடவேண்டி வந்தது. காலின்ஸ் கோமாளி, தான் பெறப்போகும் எஸ்டேட் அந்தக் குடும்பத்தை விட்டுப் போகக்கூடாதுஎன்ற நல்ல எண்ணத்தால் அதி-புத்திசாலியான எலிசபெத்தை மணக்க முயன்றது முனைந்து செய்த



கோமாளியின் அறிவுகெட்ட நல்லெண்ணம். அது எப்படி முடிந்தது? எலிசபெத் மீது நல்லெண்ணமுள்ள ஷார்லோட்டை மணப்பதிலும், எலிசபெத் சொத்து ஷார்லோட் பெறுவதிலும், எலிசபெத் பெம்பர்லியைப் பெறுவதிலும் முடிந்தது.

இளம்பெண் எலிசபெத் பார்ட்னரில்லாமல் உட்கார்ந்து இருக்கிறாள். அவளோடு டான்ஸ் ஆடச் சொல்கிறான் பிங்லி. அபிப்பிராயமில்லாவிட்டால் பேசாமலிருக்கலாம். அவள் காதில் விழும்படி ‘அவள் பரவாயில்லை’ என்று பேசினான் டார்சி. அதன் விளைவு என்ன? அடுத்த முறை அவளை நாடி டான்ஸ் ஆட அழைத்தான், மறுத்துவிட்டாள். அடுத்த முறை ஒத்துக்கொண்டு டார்சி கோபத்தைக் கிளறும் வகையில் பேசினாள். அடுத்த முறை தன் வீட்டிற்கு எலிசபெத் வந்தபொழுது டான்ஸ் ஆட அழைத்தான், இருமுறை, மும்முறை அழைத்தான். ‘‘நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கிறது. எனக்கு இஷ்டமில்லை’’ என்றாள். 4 மாதம் கழித்து ‘‘என்னைத் திருமணம் செய்துகொள்’’ எனக் கேட்டபொழுது பதில் பரவாயில்லையென வரவில்லை. நான் மணக்கும் தகுதி உனக்கில்லை எனப் பதில் வந்தது. எனக்குத் தகுதியுண்டுஎன விவரமாக எழுதி மன்னிப்புக் கேட்டு, பெம்பர்லிக்கு வந்தபொழுது மனம் உருகி இதமொழி கூறி அவளிருப்பிடம் சென்றபொழுது லிடியா ஓடிய செய்தி அறிந்து, போகக் கூடாத இடம் போய், பேசக் கூடாதவரிடம் பேசி, பரம விரோதியைச் சகலராக வரும்படி மீண்டும் கேட்டுப் பெரும் பணம் கொடுத்து லிடியாவை மணக்கச் செய்து மீண்டும் எலிசபெத்திடம் வந்து ‘‘இப்பொழுதாவது மனம் கனிந்துள்ளதா?’’ எனக் கேட்க வேண்டியதாயிற்று.

***"பரவாயில்லை" என்ற முனைப்பு, பல கட்ட அதிர்ச்சி கொடுத்து ஏற்றுக்கொண்டால் போதும்என்ற நிலைக்குக் கொண்டு வந்தது.***

✡ முனைந்து ஜேன் இலண்டன் வந்த செய்தியை, பிங்லியிடம் மறைத்த டார்சி தானே முனைந்து மறைத்ததைக் கூறி மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று.

✡ எலிசபெத் தகப்பனாரிடம் லிடியாவை பிரைட்டனுக்கு அனுப்ப வேண்டாம்எனக் கூறியபொழுது, முனைந்து விக்காமைப்பற்றி தானறிந்த சேதியை மறைத்தாள். அவன்மீது அவளுக்குள்ள ஆசை லிடியாவில் பூர்த்தியாகி, குடும்பம் சர்வ நாசமடையும் நிலை எழுந்தது.

✡ தனக்கு திருமணமில்லைஎன்ற நிலையில் எலிசபெத் டார்சியை மணக்கவேண்டும், பிங்லி ஜேனை மணக்கவேண்டும்என்ற நல்லெண்ணம் நினைத்தபடி ஷார்லோட்டிற்குப் பூர்த்தியாயிற்று. யார் மீது தனக்கு நல்லெண்ணம் இருந்ததோ அவர் விலக்கிய வரனை ஷார்லோட் மணந்து எலிசபெத் சொத்தைத் தான் பெறும்படி அமைந்தது.

✡ நல்லெண்ணத்தால் எலிசபெத்தை, சுற்றுப் பிரயாணத்திற்கு கார்டினர் அழைத்தார். அது பெம்பர்லியில் டார்சியை சந்திக்கும்படியாயிற்று. Mrs.பென்னட்டை விலக்கிய பெம்பர்லியை உரிமையுடன் அனுபவிக்க Mrs.கார்டினருக்கு அமைந்தது.

✡ உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் வழி விக்காம் ஜார்ஜியானாவைக் கடத்த முனைந்தான். அது எதில் முடிந்தது? அவமானப்பட்டு, உள்ள வேலை போய், மண்ணாங்கட்டி லிடியாவை மணக்க நேரிட்டது.

✡ முனைந்து செயல்பட்டாலும் எண்ணம் நல்லதானால், பலன் நல்லதாக இருக்கும். எண்ணம் கெட்டதானால் பலன் கெட்டதாகும்.

✡ விக்காம் வளர்ந்ததும், படித்ததும், பெற்றதெல்லாமும் பெம்பர்லியால், எலிசபெத்தை சந்தித்தவுடன் பெரும்பொய்யை விரும்பி, முனைந்து, புனைந்து, சொன்னான். இவனுடைய வண்டவாளம் முழுவதும் எலிசபெத்திற்குத் தெரியும்நிலை எழுந்தது.

✡ மேரி நன்றாகப் பாடுவாள். நடனசபையில் அவளைப் பாட எவரும் அழைக்கவில்லை. அழைப்பில்லாமல் பாட முன்வருவது அநாகரீகம். அவள் முனைந்து போய் பாடுகிறாள். தகப்பனார் வந்து “பாடியது போதும், எழுந்து வா” என அழைக்கிறார். ஜேனும், எலிசபெத்தும் பிங்லியையும், டார்சியையும் மணந்தனர். லிடியா விக்காமை மணந்தாள். கிட்டி பிங்லி குடும்பத்துடன் நெருங்கிப் போகிறாள். முனைந்த மேரி



தனியாக விடப்படுகிறாள்.

✡ காலின்ஸ் லாங்பார்ன் வந்தபொழுது விஷமமாக பென்னட் அவனை லேடி காதரீனைப்பற்றிச் சீண்டுகிறார். அந்த முனைப்புக்குப் பதில் காலின்ஸ் கடிதமாக வருகிறது. லிடியா ஓடிப்போனபொழுது காலின்ஸ் நிந்தனையாகக் கடிதம் எழுதி தான் அந்த அவமானத்தினின்று தப்பித்துக் கொண்டதாகக் கூறுகிறான். அச்செயலின் பலன் அத்துடன் முடியவில்லை. டார்சியைப்பற்றி மீண்டும் ஒரு முறை கடிதம் எழுதி எச்சரிக்கிறான்.

***கேலியான முனைப்பு கேலியில் முடிகிறது.***

காலின்ஸ் எழுதிய கடிதங்களின் விளைவு லேடி காதரீன் கோபாக்னி இனி தாங்க முடியாமல் லாங்பார்ன் வந்து டார்சி, பிங்லிமுன் தன் கோமாளித்தனத்தை வெளியிடும்படியாயிற்று.

✡ லேடி காதரீன் எடுத்த காரியம் - முனைந்தது - அவள் எதிர்பார்த்ததிற்கு எதிராக எலிசபெத் திருமணத்தை உடனே முடித்தது.

✡ டார்சி விக்காமுக்கு £3000 கொடுத்தான். இது டார்சி தானே செய்த காரியமில்லை. விக்காம் கேட்டுப் பெற்றது. முனைந்தது விக்காம். உடந்தையானது டார்சி. விளைவு என்ன? £30,000 ஜார்ஜியானா மீதுள்ளது. விக்காம் அதைப்பெற முடிவுசெய்து செயல்பட அஸ்திவாரமானது டார்சி கொடுத்த 3000 பவுன். இது அவனே முன் வந்து செய்யாத காரியம்என்பதால் விக்காம் புறப்படும்முன் டார்சி விஷயமறிந்து ஜார்ஜியானாவைக் காப்பாற்ற முடிந்தது.

- ❀ திறமையும் கடமையும் உள்ள இடத்தில் முனைவது பலன் தரும்.
- ❀ பெற்றோர் கர்மம் உள்ள இடத்தில் பெருமுயற்சிக்குச் சிறுபலன் வரும். பெற்றோர் கர்மம் நிலைக்கும்.
- ❀ ஆசைப்பட்டு, அவசரப்பட்டு முனைவது, அவதிப்பட்டுப் பொறுமையாகச் சீர் செய்யும்படி முடியும்.
- ❀ தெளிந்த நல்லெண்ணம் உயர்ந்த பலனைத் தரும்.
- ❀ தனக்கில்லாவிட்டாலும் பிறர் பலன்பெற முனைவது தனக்கில்லாத

உயர்வைத் தேடிவந்து தரும்.

- ❀ திருட்டுத்தனமாக கபடமான உள்ளத்தால் செய்வது மானம் போய் எதிரியிடம் மண்டியிடும்படி அமையும்.
- ❀ காரியத்தைத் தட்டிக் கழிக்க எடுக்கும் முடிவு சிறுபலனுக்காகச் செய்தாலும் பெரும்பொறுப்பைப் பாரமாகக் கொண்டு வரும்.
- ❀ யோகத்திற்கு முனைவது பொருந்தாது.
- ❀ வாழ்க்கைக்கு நல்லெண்ணத்தில் முனைவது பொருந்தும்.

அதுவும் செய்யாமலிருக்கும் பொறுமை ஆன்மீகப்பலன் தரும்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்மை மாற்றிக் குறைகளை நீக்கலாம். அருளால் வரும் குறைகளை அதுபோல் மாற்ற முடியாது. அடுத்த - உயர்ந்த - நிலையில் அவற்றைத் திருத்த வேண்டும்.

***அருளால் குறை வரும். நாம் உயர்ந்தால் அது திருந்தும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வு நிலைக்கு மேற்பட்ட முன்னேற்றம் பிரச்சினை-யற்றிருக்கும். அல்லது நம் சக்திக்குட்பட்டு முயற்சி அமையும். வாழ்வு நிலையை முன்னேற்றம் மீறினால், சக்திக்குட்பட்ட முயற்சியானாலும் பிரச்சினை எழும்.

***நிலையை மீறிய முன்னேற்றம் பிரச்சினை தரும்.***



# அன்பர் கடிதம்

***OM MOTHER   OM SRI ARAVINDAR***

ஸ்ரீ அன்னை அவர்கள் எங்கள் இல்லங்களில் இப்போது புதிதாக வந்தபோதிலும் பல மாற்றங்களை செய்து வருகிறார். *(1)* முதலில் மனமாற்றம் வந்தது *(2)* இரண்டாவது வீட்டை சுத்தம் செய்வது *(3)* மன உறுதியுடன் அன்னையை வழிபடுவது *(4)* திடநம்பிக்கை *(5)* முயன்று முன்னேற்றப் பாதையில் செல்லல். இவற்றை எங்கள் முதல் படிகளாக கொண்டு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு விநாடியும் நினைக்கிறேன். இப்போது ஏதோ இனம் புரியாத மாற்றம் என் இரத்த செல்களில் செயல்புரிவதை உணர்கிறேன். 15 நாட்களாக என் திருமணத்திற்கு கணவர் வீட்டில் போட்ட மோதிரம் காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. சிறிய வருத்தம் இருந்தபோதிலும் அன்னை எப்படியும் கிடைக்க வழி செய்வார்கள் என்ற உறுதியோடு என்னுடைய பிரார்த்தனையைத் தீவிரப்படுத்தி, அன்னையின் கண்களில் ஒருமுனைப்பட்டேன். *(1.4.09)* அன்று சுபிக்ஷ தினம் ஆதலால் அன்னையின் பாதங்களில் கோரிக்கை எழுதி, மலர்களால் அன்னை symbolஉம் வரைந்தேன். *(மௌனமாக)* இரு சீட்டு எழுதிப் போட்டேன். *(1)* அன்னைமீது ஆணையாக மோதிரம் கிடைக்கும் *(2)* அன்னைமீது ஆணையாக மோதிரம் கிடைக்காது என எழுதி அன்னைமுன் போட்டு என் 2½ வயது குழந்தை அனுவை விட்டு *(கண்ணீருடன்)* எடுக்கச் சொன்னேன். மோதிரம் கிடைக்கும் என்ற சீட்டை என் குழந்தை எடுத்துத் தர என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எங்கு போட்டோம்என்ற ஞாபகத்தை அன்னை தரவே, என் சின்ன மாமனார் இருக்கும் அறையில், கிரைண்டர் அரைக்கும் இடத்தில் மாவு வழிக்க மோதிரத்தை கழற்றி வைத்து மறந்தே போனேன். அந்த ஞாபகத்தை அன்னையே தந்தார்கள். பிறகு என் மாமனாரிடம் கூறி மீண்டும் ஒரு முறை தேடி பார்த்தபொழுது, என் மாமியார் மோதிரத்தின் மீது துவைத்த துணிகளை வைத்து அதை அப்படியே ஒரு அட்டைப்

பெட்டியில் வைத்துவிட்டார். நானும் பல முறை எல்லா இடங்களிலும் தேடினேன். என் வேதனையை அன்னையிடமே சமர்ப்பணம் செய்தேன். 2.4.09 அன்று காலை என் சின்ன மாமனார் சந்தோஷச் செய்திஎன்று கதவைத் தட்ட, கையில் மோதிரத்துடன் வந்தார். நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

*- மீனாட்சி கண்ணன், பணகுடி*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நிலையிலுள்ள பாதுகாப்பு, அடுத்த நிலையின் பழக்கத்தை மிருதுவாக்கும்.

***பரம்பரை அந்தஸ்து இனிமை தரும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மாற்றம், அளவு, தன்னையறிவது, சிந்தனை, பிரிவினை, தன்னை விழுங்குவது, துண்டாடுவது, திசை மாறுவது ஆகிய கருவிகளை சிருஷ்டி பயன்படுத்துகிறது.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அடக்க முடியாத தெம்பை, அடக்க முடியாத ஆர்வமாக மாற்றுதல் அளவு கடந்த பலன் தரும்எனினும் அது யோக சக்தியாகாது.

***தெம்பு ஆர்வமானால் பலன் பெரியது. அது யோகமில்லை.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**957) ஒரு காலத்தில் புனித உணர்வுகள் வேறொரு காலத்தில் கேலிக்குரியவை. உணர்வுகள் குறிப்பிட்ட காலத் தேவைகளால் நிர்ணயிக்கப்படுவதால் யுகாந்திரப் பண்புகள் அல்ல.**

***புனித உணர்வும் புரையோடிப் போகும்.***

தலைமுடி, உடை, உணவு, வீட்டின் கட்டமைப்பு, பெரியோர் சிறியவர் உறவு, மரியாதை, மானம், அந்தஸ்து ஆகியவை காலத்தால் ஏற்பட்டவை. காலம் மாறினால் அவை மாறும். சில விட்டுப் போகும். மற்றவை கேலிக்குரியவையாகும்.

***புனிதம் என்றும் புனிதமானதே.***

***அது காலத்தைக் கடந்தது.***

***காலத்தால் ஏற்படுபவற்றால் அவை வெளிப்படா.***

- ✡ இரண்டு கட்டு வீடு, வாசல், கூடம் பெரியதுஎன்பது வீட்டு அமைப்பு.
- ✡ திண்ணைப் பள்ளிக்கூடம் பிரசித்தி பெற்றது.
- ✡ முந்திரி கணக்கு பிரபலம்.
- ✡ லட்டு, ஜிலேபி, அற்புதமான இனிப்பு.
- ✡ கட்டுக் குடுமி முக லக்ஷணம்.
- ✡ 9 கஜம் புடவை அந்தஸ்து தரும்.
- ✡ நெற்றி நிறைய விபூதி, திருமண் முக அலங்காரம்.
- ✡ பஞ்சகச்சம் புருஷ லக்ஷணம்.
- ✡ விவசாயம் புனிதத் தொழில்.
- ✡ இன்ஜினியர், டாக்டர், மனு நீதிப்படி சூத்திரத் தொழில்.
- ✡ இராணுவம் க்ஷத்திரியனுக்குரியது.
- ✡ சர்க்கார் வேலை வைஸ்யனுக்குரியது.

✡ கலப்புத்திருமணம் ஊரைவிட்டு ஓடி ஊருக்கு வெளியில் குடியிருக்கச் செய்யும், சண்டாளன் எனப்படும்.
✡ கடல் கடந்து சென்றால் ஜாதிப் பிரஷ்டம் செய்வார்.

இன்று காலம் மாறிவிட்டது.

✡ திண்ணையும், வாசலும், கூடமும் போய் எத்தனை பெட்ரூம் என்று கேட்கிறார்கள்.
✡ திண்ணையே மறந்துவிட்டது, அங்கே பள்ளிக்கூடமில்லை.
✡ முந்திரிக் கணக்கில்லை, கால்குலேட்டர் வந்துவிட்டது.
✡ கேக்கும், பிஸாவும் பிரபலமானவைகள்.
✡ குடுமி வைத்தவரைக் காணமுடியாது. கண்டால் கேலிக்குரியவர்.
✡ புடவையே இல்லை, சுரிதார் வந்துவிட்டது.
✡ ஜீன்ஸ் வந்தபிறகு வேட்டிக்கு வேலையில்லை.
✡ விவசாயப் பட்டம் பெற்றவர் உள்பட நிலத்துப் பக்கம் போகமாட்டார்கள்.
✡ 20 இலட்சம், 40 இலட்சம் கொடுத்து டாக்டர் படிக்க, இன்ஜினியர் கல்லூரியில் சேர முயல்கின்றனர்.
✡ இராணுவம் அனைவர்க்கும் உரியது.
✡ சர்க்கார் வேலை கிடைத்தால் போதும்என்பது நிலை. ஜாதியே தேவையில்லை.
✡ கலப்புத்திருமணம் தங்க மெடல் பெறுகிறது.
✡ அமெரிக்கா போவதே இலட்சியம்.

நட்பு, நாணயம், கற்பு, விஸ்வாசம், மரியாதை, மானம், பக்தி, தெய்வ பக்தி ஆகியவை நிலைக்கும். அவை உருமாறலாம். அதன் அர்த்தம் அழியாதது. அவை தோற்றத்திற்குரியவையல்ல. உள்ளுறை விஷயமாகும்.

❀ ❀ ❀

**958) சுபாவத்தைக் கட்டுப்படுத்துவது பலன் தாராது. சுபாவம் முழுமையானது. அதைக் கட்டாயப்படுத்தும் எண்ணம் அதன் சிறு பகுதி. பகுதிகளின் நிர்ப்பந்தத்தைமீறி முழுமை தன்னைத் தன் நிலைக்குக் கொண்டு வரும்.**



*பெரியது சிறியதைமீறி நிறையும்.*

கர்மத்தை மீற முடியாது, சுபாவம் மாறாது. சுபாவத்தை மாற்ற முயன்றால் முடிவில் சுபாவம் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். நம் முயற்சி பலன் தாராது.

✡ சிருஷ்டிஎன்பது சுபாவம், ஸ்வரூபம்.
✡ கருமிக்குக் கொடுப்பது சிரமம்.
தாராள மனப்பான்மையுள்ளவனுக்குக் கொடுக்காமலிருப்பது சிரமம்.
✡ அவசரப்படுபவனுக்குப் பொறுமை வாராது.
நிதானமானவனுக்கு அவசரம் தலைவலி.
✡ பிடிவாதக்காரன் விட்டுக்கொடுக்கமாட்டான்.
அனுசரிப்பவன் பிடிவாதம் செய்ய சங்கடப்படுவான்.
✡ படிப்பு வாராதவனுக்குப் படிப்பது சிரமம்.
படிக்க ஆர்வமுள்ளவனுக்கு படிக்காமலிருக்க முடியாது.
✡ சுயநலமி எவருடைய துன்பத்தாலும் அசையமாட்டான்.
இளகிய மனமுள்ளவர் எவர் துன்பத்தையும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்.
✡ அதிகாரம் செய்பவன் கொடுமை செய்வதை ரசிப்பான்.
அது சுபாவத்திலில்லாதவன் கொடுமை செய்யச் சொன்னால், அதைக் கொடுமையாகக் கருதுவான்.
✡ பொய்யனுக்கு மெய் வாராது.
பொய் சொல்லியறியாதவனுக்கு பொய் சொன்னால் மண்டை வெடித்து விடும்.
✡ பண்பான ஊரில் வரும்விருந்தாளியைச் சாப்பிட்டுவிட்டு வரச் சொல்ல நாக்கு, கூசும்.
பண்பற்ற ஊரில் எவரும் சாப்பிட அழைக்கமாட்டார்கள்.
✡ மனிதனுக்கு இயல்பானது வன்முறை. இது ஆன்மீக நாடென்பதால் மகாத்மாகாந்தி அஹிம்சையைக் கைக்கொண்டார். சத்தியாக்கிரகத்தில் ஓரிரு கொலை விழுந்தால் சத்தியாக்கிரகத்தை ரத்து செய்வார். 1946இல் நாடெங்கும் வன்முறை பீறிட்டெழுந்தது. ‘‘இயல்பான

வன்முறையை மறுத்து அடக்க முயன்றேன். இன்று வன்முறை என்னைப் பழி வாங்குகிறது" என்றார்.

*மகாத்மா வன்முறைக்குப் பலியானார்.*

வன்முறை மனிதசுபாவம். அதைப் பெருமளவில் தடுக்க முயன்றால் வன்முறை பெரிய அளவில் எதிர்க்கும்என்பது பிரபஞ்ச சட்டம்.

✡ பணம் வந்தால் பல மனைவிகளை ஆண்மகன் நாடுவான்என்பது சட்டம், அதைச் செய்யாதவரில்லை.

✡ மேல் நாடுகளில் பெண்கள் நம் நாட்டு ஆண்களாகப் பழகுகின்றனர். நம் நாட்டில் அந்த சுபாவம் நாட்டின் ஆன்மீகப் பண்பிற்குக் கட்டுப்பட்டு கற்பென உருவாகி நாட்டிற்குப் பெருமை தேடியது. மனம் அறிவால் விளக்கம் பெற்றால், அதையும் உலகம் ஏற்குமானால் சுபாவமும் அடங்கும். அப்பொழுதும் சுபாவம் அடிப்படையில் மாறாது. அகல்யாபோல் இந்திரனை ஆர்வமாக நாடி அனுபவிக்கும்.

❀ ❀ ❀

**959) அழைப்பை மீறிய பயம், பெருமுயற்சியை மீறும் எண்ணம் ஆகியவை நம் அடிப்படை நம்பிக்கையை விரிவுபடுத்த வேண்டும் என அறிவிக்கின்றன. அதைச் செய்தால் பயம் மறைகிறது. சரணாகதியை எதிர்க்கும் எண்ணம் சரணடைகிறது.**

*அறிய மறுக்கும் பயம் சரணாகதியை எதிர்க்கும் எண்ணம் அடிப்படையில்லையென அறிவிக்கிறது.*

✡ மனிதன் என்பதற்கு அடிப்படை மனிதசுபாவம், மனிதாபிமானம்.

இன்றைய சமுதாயத்தில் மனிதாபிமானமில்லாதவர் ஏராளமாக உண்டு.

இன்ஷூரன்ஸ் பணம்பெற தம் 3 குழந்தைகளைத் தூக்கிலிட்ட தாயார் அழகுக்குப் பேர்போனவர்.

**அடிப்படையேயில்லாதவருக்கும் அருளுண்டுஎன வழங்குபவர் அன்னை.**

✡ பயந்த சுபாவமுள்ளவர், எதற்கெடுத்தாலும் பயப்படுபவர், அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டால், சமாதி அருகே வந்தால், அன்னையைத் தரிசனம் செய்தால், அன்னைபடத்தைப் பெற்றுக் கொண்டால், அவர்



எழுதியதைப் படித்தால்

❀ பயம் இருந்த இடம் தெரியாமற் போகும்.

❀ தன்னையறியாமல் இதுவரை சிரித்தறியாதது போல் முகம் மலர்ந்து சிரிப்பு எழும்.

❀ புகைமண்டலம் விலகுவதுபோல் பீடித்திருந்த பயம் விலகுவது தெரியும்.

சுமார் 50 ஆண்டுகட்கு முன் ஆப்பிரிக்காவில் ஒருவருடைய நண்பர் இறந்துவிட்டார். மிக நெருங்கிய நண்பர்என்பதால், அவர் இறந்தவருக்குக் கொள்ளி வைத்தார். அதே நிமிஷம் அவர் வயிற்றில் பீதி வந்து நிலையாகக் குடிகொண்டது. சட்டப்படி கொள்ளி வைக்க உரிமையுள்ளவர் செய்வதை அடுத்தவர் செய்ய சட்டம் அனுமதிக்காது. இந்த அன்பர் பாண்டிச்சேரி வந்து தங்கிவிட்டார். அன்னையை பால்கனி தரிசனம், தரிசனம், விளையாட்டு மைதானம் போன்ற இடங்களில் ஏராளமான முறை சந்தித்துள்ளார். அவருக்கு அன்னை மீது நம்பிக்கையில்லை. பெரிய கம்பனி முதலாளி. பிறந்த நாளில் அன்னையிடம் நேரடியாக ஆசீர்வாதம் பெறுவார். ஏதாவது ஒரு சமயம் அவர் அன்னையை தரிசிக்க அனுமதி கேட்டால் அன்னை மறுத்து விடுவார். பலகோடி சொத்துள்ளவர். காணிக்கையெனத் தர அவருக்குத் தோன்றியதில்லை. 30 ஆண்டுகட்குமுன் என்னிடம் வந்து தன் வயிற்றைப் புரட்டும் பீதி போக வழியுண்டாஎனக் கேட்டார். எருக்கம் பூவிற்கு *தைரியம்* எனப் பெயர். அது பயத்தை விலக்கும் என்றேன். அவர் எருக்கம்பூவை எடுத்துக்கொண்டால் பீதி அதிகமாகிறதுஎன்று கண்டார். எருக்கம் பூவை அன்னை படத்தின் முன் 1 நாள் வைத்து மறுநாள் பையில் வைத்துக்கொள்ளச் சொன்னேன். பீதி போய்விட்டது. (20 ஆண்டுகட்கு முன் மலர்களைப் பற்றி இதையே எழுதினேன்).

❀ மலர்கள் தவறாது பலன் தரும்.

❀ முறையாகப் பயன்படுத்தாவிட்டால் பலனிருக்காது.

❀ நம்பிக்கையற்றவர்க்கு, அருளைப் பெறும் தகுதியற்றவர்க்கு மலர்கள் எதிரான பலனும் தரும்.

❀ காணிக்கை ஆசீர்வாதம்பெற அவசியம்.

❀ **மனமும், செயலும், நேர்மையும், அம்சமும் சரியாக இருந்தால் வேறெந்த நிபந்தனையுமின்றி அன்னையின் பெயரைக் கேட்ட அரைநிமிஷத்தில் 50 ஆண்டு பிரச்சினை திடீரென மறையும்**.

❀ காசு செலவு செய்ய மனமில்லாதவருக்குக் காணிக்கையில்லாமல் பிரார்த்தனை பலிக்காது.

❀ மனம் மலர்ந்தால் சிறுகாணிக்கையும் பெரும்பலனைத் தரும்.

❀ மனம் மகிழ்ந்து, நெகிழ்ந்து, மலர்பவர்க்குக் காணிக்கையும் தேவையில்லை.

❀ காணிக்கை பலன்பெற அவசியமில்லை. சேவை செய்ய அவசியம்.

❀ பெறுவது, உணர்வதைப் பொருத்தது.

❀ அன்னையிடம் நடக்காததில்லை.

அன்னையிடம் நடக்காதது அகிலத்தில் வேறு எங்கும் நடக்காது.

❀ ❀ ❀

*தொடரும்....*

## ஜீவிய மணி

**கடவுளை, கடைத் தெருவில் காண வேண்டும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்தப் பிரச்சினை தீரவில்லையோ அவ்விஷயத்தில் நமக்கு அன்னைமீது நம்பிக்கையில்லை.

***நம்பிக்கை போனால் பிரச்சினை வரும்.***





# Sri Aurobindo does not want Mother to work for 2 days before Darsan

# தரிசனத்திற்கு 2 நாள் முன் அன்னை வேலை செய்யக் கூடாதுஎன்றார் பகவான் ஸ்ரீ அரவிந்தர்

*- அஜெண்டா*

1962 வரை அன்னை காலை 6.15க்கு ஆசிரமத்தின் வடக்குப் பகுதியில் உள்ள பால்கனியில் வந்து நின்று தரிசனம் சுமார் 15 நிமிஷம் தருவார்.

1964லிருந்து ஆசிரமத்தின் கிழக்குப் பகுதியில் 3ஆம் மாடியில் உள்ள பால்கனியில் மாலை 5.15க்கு தரிசனம் 1973 ஆகஸ்ட் 15 வரை தந்தார்.

தரிசன சமயம் அன்னை கீழே குழுமியுள்ள அனைவரையும், ஒருவர் விடாமல், பார்ப்பார். பார்த்தபின், ஆகாயத்தை நோக்கிப் பார்த்தபடி 15 நிமிஷம் நிற்பார். அத்துடன் தரிசனம் கலையும். "அனைவருடைய ஆர்வத்தையும் ஒன்று சேர்த்து, இறைவனுக்கு நான் தினமும் அர்ப்பணிப்பேன்" என அவர் தரிசனத்தை விவரித்துள்ளார்.

பரீட்சைக்குப் படிப்பவர்கள், கதை கட்டுரை எழுதுபவர்கள், வழக்கை உருவாக்கும் வக்கீல், சிந்தனையாளர்கள் அதிகாலையில் மனம் தெளிவாக இருப்பதையும், எண்ணங்கள் எளிதில் வருவதையும் காண்பார்கள். இரவு உடல் அமைதியாகத் தூங்குவதால் காலையில் மனம் தெளிவாக இருக்கும். மனிதன் தூக்கத்தில் சச்சிதானந்தத்தைத் தொட்டு தானிழந்த தெம்பைப் பெறுகிறான் என்கிறார் அன்னை.

✡ எண்ணங்கள் உடலில் உற்பத்தியாகின்றனஎன்றார் பகவான்.

- ✡ உடல் அமைதியானால் பெரிய எண்ணங்கள் உற்பத்தியாகும்.
- ✡ தூக்கத்தில் உடல் அமைதியாவதுபோல் தியானத்தில் பேரமைதியுறும்.
- ✡ அந்த அமைதி சமாதியில் முழுமை பெற்று உச்சியைத் தொடும்.
- ✡ தரிசனத்தில் அன்னை பக்தனையும், பரமாத்மாவையும் இணைப்பதால் அன்னைக்கு உயர்ந்த அமைதி தேவைப்படுகிறது.
- ✡ ஒரு குரு ஒரு சமயம் ஒரு சிஷ்யனுக்கு மட்டும் அப்படிப்பட்ட அனுக்கிரஹம் செய்ய முடியும். அன்னை பலஆயிரம் பக்தர்கட்கு ஒரே சமயத்தில் அதைச் செய்கிறார். அது போன்றவர் உலகில் இதுவரைப் பிறந்ததில்லை.
- ✡ அமைதி என்பது Peace. மௌனம் என்பது Silence. மௌனத்திற்குப் பின் மௌனம் Silence behind Silence என்பதும் உண்டு.
- ✡ அதை உடல் ஏற்று பக்தர்கட்களிக்க உடலுக்குத் தூக்கம் தரும் அமைதியோ, தியானம் தரும் அமைதியோ, சமாதி தரும் அமைதியோ போதாது. விழிப்பில் சமாதி நிலையை எய்துபவராலேயே அதைச் செய்ய முடியும். அதுவும் சித்தித்தவர் அன்னையும், பகவானும்.
- ✡ அந்த சித்தி பெற்றிருந்தாலும் அது நடைமுறையில் செயல்பட உடலுக்கு வேலையில்லாமல் நீண்ட அமைதி தேவை.
  அதைக் குறிப்பிட்டு பகவான் இரு நாட்கள் வேலை செய்யக் கூடாது என்றார்.
  வேலை செய்தால் உடல் படபடக்கும்.
  படபடப்பு அடங்கியபின்னரே அமைதியை அடுத்தவர்க்கு அளிக்க முடியும்.
  நினைத்தால் மனம் பதைக்கும்.
  உணர்ந்தால் நாடி நரம்பு பதைக்கும்.
  அசைந்தால் உடல் படபடக்கும்.
  உடலிலும், ஜீவியம், பொருள்என இரு பாகங்களுண்டு.
  ஜீவியம் அமைதி பெற்றாலும், பொருள் அமைதியுறாது.
  பொருளும் அமைதியுற தியானம், சமாதியைக் கடந்த அமைதி தேவை.

❀ ❀ ❀



# பூரண யோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**(20) பிரம்மம், புருஷன், ஈஸ்வரன், மாயா, பிரகிருதி, சக்தி ஆகிய அனைத்தும் ஒன்றே என்ற அனுபவம்.**

தத்துவம் தத்துவமாகப் புரிவது யோகம் செய்யும் சாதகர்க்குரிய அனுபவம். தத்துவம் நடைமுறையாகப் புரிவது ஒரு வகையில் அதைவிடப் பெரியது எனினும், எளிய அன்பர்கள் அதை மட்டும் காண முடியும்.

இந்து மதப் பரம்பரையில் பிரம்மம், மாயாஎன்பது புருஷப் பிரகிருதிக்கு எதிரானதுஎனக் கருதப்படுகிறது. இந்த மூன்று தத்துவங்களில் எதுவும் மற்றதை ஏற்பதில்லை. ஸ்ரீ அரவிந்தம் இந்த **மூன்று தத்துவங்களும் ஒரு கொள்கையின் 3 தோற்றங்கள் எனக் கூறுகிறது. ஏதாவது ஒரு வகையில் நமக்கு அது தட்டுப்படுமானால், நமக்கு ஸ்ரீ அரவிந்தம் பலிக்கும்என்பது இக்கட்டுரை**.

சும்மாயிருந்து சுகம் பெறும் ஞானி, பக்தனை கூத்தும் பாட்டும் பக்குவமற்ற பக்தனுக்குடையதுஎன்றும், கர்மம் வளர்ச்சியடையாத ஆத்மாவுக்குரியதுஎனவும் கூறுகிறான். ஞானமும், பக்தியும், கர்மமும் சேர்ந்ததே வாழ்வு, எதுவும் விலக்கன்றுஎன்பது ஸ்ரீ அரவிந்தம்.

கைதானே மனிதன் கால் அதில் சேர்ந்ததில்லைஎன நினைத்து காலை வருத்தினால் பாதிக்கப்படுவது மனிதன். அவனுள் கையொரு பகுதி. தமிழ்நாடும், கர்நாடகாவும் இந்தியாவின் பகுதிகள். அவை சண்டையிடுவது நாட்டைப் பாதிக்கும். நம் அன்றாட வாழ்வில் பிரம்மமும், புருஷனும் எங்கு காணப்படும்? நேரடியாக உதாரணம் எழுதுவது முடியாது.

5 வயதுக் குழந்தை வழிதவறி வந்து தடுமாறுவது நம் கண்ணில் பட்டால் நாம் அனுதாபத்தால் அக்குழந்தையைப் பெற்றோரிடம் சேர்க்கிறோம். அது நல்ல குணம். என் குழந்தை இதுபோல் வழி தவறினால் யாராவது உதவக்கூடாதாஎன நான் நினைப்பதுபோல், இப்பொழுது நினைவு எழுவது அனுதாபத்தைவிடச் சிறந்தது. தத்துவப்படி பிரம்மமும், புருஷனும் ஒன்றுஎன்ற கொள்கை மனத்தில் உணர்வாக அப்படி எழுகிறது. ஒலிம்பிக்கில் ஓர் இந்தியன் பரிசு பெற்றால் அது நான் பெற்ற பரிசாக நினைப்பது புருஷனும், ஈஸ்வரனும் ஒன்றுஎன்ற கொள்கை என் மன உணர்வாக எழுகிறது. ஒலிம்பிக்கில் யாரோ ஒருவன் 100-yards ஓட்டத்தில் புதிய ரிகார்ட் ஏற்படுத்தியபொழுது, நான் பெருமிதம் அடைந்தால் அது, பிரம்மம், புருஷன், ஈஸ்வரன் ஆகிய மூன்றும் ஒன்றேஎன என் மனம், உணர்வு அறிவதுஎனப் பொருள்.

உலகம் ஒன்றுஎன்பதை பிரம்மம் முதல் நிலையிலும், புருஷன் இரண்டாம் நிலையிலும், ஈஸ்வரன் மூன்றாம் நிலையிலும் உணர்கிறான். **இவை மூன்றும் ஒன்றுஎன உணர்வதில் 3 நிலைகள் உள்ளன**.

- ✡ நமக்கு வேண்டியவரும் நாமும் ஒன்றேஎன்பது ஒரு நிலை.
- ✡ நமக்கு அறிமுகமில்லாதவரும் நாமும் ஒன்றேஎன்பது அடுத்த உயர்ந்த நிலை.
- ✡ நமக்கு வேண்டாதவரும் நாமும் ஒன்றேஎன்பது மேலும் உயர்ந்த நிலை.
- ✡ உலகமும் நாமும் ஒன்று, என் எதிரியும் நானும் ஒன்று, என்னை அழிப்பவனும் நானும் ஒன்று, என் மானம், மரியாதை, உயிர், உடலை அழிக்கக் கங்கணம் கட்டியவனும் நானும் ஒன்று என்பவை ஐக்கியத்தின் நிலைகள்.
- ✡ எதிரி பதவிக்கு வந்தால் உறவு கொண்டாடி, உதவி கேட்பவர் உண்டு.

  அவர்கள் ஆதாயத்திற்காகச் செய்வதை நாம் இலட்சியத்திற்காகச் செய்ய வேண்டும்.



- ✡ அரசியலில் பெரிய விஷயங்களிருப்பதால், பகைமை பாராட்ட முடிவதில்லை.
- ✡ பலனுக்காகப் பகைமை பாராட்டாததுபோல், பிரம்மம், புருஷா, ஈஸ்வரன் ஒன்றுஎன்ற ஞானத்தெளிவால் இலட்சியத்திற்காக நாம் எளிய மனிதன் போல் நடக்க முடிவது யோக அம்சம் செயல்படுவதாகும்.
- ✡ நாம் ஆதாயத்திற்காகச் செயல்படுகிறோமா, இலட்சியத்திற்காகச் செயல்படுகிறோமாஎன்பதை மனம் தெளிவாகக் காட்டும்.

  **அது யோகத் தெளிவானால், யோகம் பலிக்கும்.**

### (21) உலகை சிருஷ்டித்தது மனமில்லை, சத்தியஜீவியம்.

மனம்என்பது பிரம்மா. பிரம்மா உலகை சிருஷ்டிக்கவில்லை. பிரம்மா பிறந்த இடமான சத்தியஜீவியம் உலகை சிருஷ்டித்தது என்பது ஸ்ரீ அரவிந்தம். இது நமக்குப் புலப்படுவது எப்படி?

1) கர்மம் வாழ்வில் பலிக்கவில்லைஎனில்,
2) மனிதன் தன் சுபாவத்திற்கு மாறாக, அல்லது எதிராகச் செயல்பட்டால்,
3) புயல், பூகம்பம், எரிமலை வெடிப்பது பிரார்த்தனைக்குக் கட்டுப்பட்டால்,
4) இதுவரை நம் அனுபவத்திலில்லாதது, நம் அனுபவத்திற்கு எதிரானது நம் வாழ்வில் அதிர்ஷ்டமாக, அருளாக நடந்தால்
5) **ஆண்டவன் கை அரணாக விபத்திலிருந்து தடுத்துக் காப்பாற்றினால்,**

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மனத்தில், “இதுவரை நாமறிந்த உலகம் இதுவல்லவே” என்ற கருத்து உதயமானால், மனம் தலைப்பைக் கருதுகிறதுஎனப் பொருள். அப்படிக் கருதும்பொழுது ஒளி மனத்தில் உதயமானால் அவ்வொளியின் நிறத்திற்கு ஆன்மீகப் பொருள் உண்டு.

*வெண்மையான ஒளி - சத்புருஷன், அன்னை Supreme எனக் குறிப்பிடுவது.*

*பொன்னொளி* - *சத்தியஜீவியம்.*

*நீல ஒளி* - *கிருஷ்ணபரமாத்மாவின் தெய்வீக மனத்தின் நிறம்.*
*இதை அன்னை ஸ்ரீ அரவிந்தரது ஜோதி என்கிறார்.*
*ஆசிரமக் கட்டிடங்கள் இப்படிக் காட்சியளிக்கும்.*

பொன்னொளிக்கு இந்த ஞானத்தைத் தரும் திறன் உண்டு. புயல் வேகமாக உருவாகும்பொழுது, ரேடியோ புயல் 150 மைல் வேகத்தில் எழுகிறதுஎன அறிவிக்கிறது. இதைக் கேட்டவுடன் தியானத்தில் அமரும் பக்தர் உள்ளே புயல் வீசுவதைக் காண்பார். தியானத்தால் உள்ளே எழும் புயல் அடங்கினால் வெளியே புயல் அடங்கும். விலகிப் போகும்.

✡ பகவான் ஸ்ரீ அரவிந்தரை ஏற்றவர் சூழலில் பகவான் சக்தி அவரையறியாமல் செயல்படும். பூகம்ப அதிர்ச்சி அவரை வந்து தொட்டவுடன் அடங்கி, அமைதியாகி, அழியும்.

✡ ஜாதகத்தில் இந்த 30ஆம் வயதில் தவறாது 6 மாதம் படுக்கையாக இருக்க வேண்டும்என்று கூறியிருந்தால், அச்செய்தியை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால், கண்டத்தின் சுவடேயறியாமல் அது விலகும்.

இந்த எண்ணம் - சத்தியஜீவியம் உலகைச் சிருஷ்டித்தது - மனத்தில் தோன்றினால், அவ்விடத்தில் பொன்னொளி ஒரு துளி எழும். அது பகவான் ஸ்ரீ அரவிந்தர் உருவமாக மாறும். நமக்கு யோகம் பலிக்கும் அடையாளம் இதுஎன ஓர் அன்பர் அறிந்து கொள்ளும் தடயம் இது.

எல்லா அன்பர்களை நோக்கியும் வரும் சித்திகள் இவை. ஒரு கல்லூரியில் படிக்கும் மாணவன் Ist class முதல் வகுப்பில் பாஸ் செய்தால், அவன் பெறப்போகும் M.A. பட்டத்திற்கு அக்கல்லூரி ஆசிரியராகும் வாய்ப்புண்டுஎன அவன் அறியலாம்.



பல்கலைக்கழகத்தில் முதலாவதாக, Ist classஇல் பாஸ் செய்த மாணவன் LICஇல் கிளார்க்காகச் சேர்ந்தான். அவனுக்கு அப்பல்கலைக்கழக ஆசிரியராகும் வாய்ப்புண்டுஎனத் தோன்ற-வில்லை. அதை ஒருவர் எடுத்துச் சொன்னபிறகு, அவனுக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது. இக்கட்டுரைகள் அது போல் தகுதியுள்ளவர்கட்கு சொந்தமாக அது தோன்றவில்லையெனில், அவர் தகுதியை எடுத்துக் கூறுபவை.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உயர விரும்புபவனுக்கு, தெம்புக்கு பஞ்சமில்லை. விருப்பம் தேவையான தெம்பை உற்பத்தி செய்ய வல்லது.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னையின் கோட்பாடுகளை ஜீவன் ஏற்பதால் ஏற்படும் மனநிலை, அன்னையின் சக்திக்குரிய கருவி. புற ஸ்தாபனமன்று.

***ஜீவன் ஏற்ற மனநிலையே கருவி.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

விஷயத்தை நாடுபவன், தோற்றத்தைப் போற்றுபவனைத் திருப்திப்படுத்த முயன்றால் காரியம் கெடும்.

## பிரம்மம் தன்னையறிவதால் உலகில் பிரம்மமாகிறது. பிரம்மம் பிரம்மமாவதால் தன்னையறிகிறது (P.143)

✡ பிரம்மம் உலகிலுள்ள அனைத்தையும் தன்னுட்கொண்டது.

இனி உலகில் வரப்போகும் அனைத்தையும் தன்னுட் கொண்டது.

✡ மனிதன் அழைத்தால் வரும், அவனிஷ்டப்படி செயல்படும்.

அதனால் தன் விருப்பத்தை அவன் மீது திணிக்காது. *அவனைக் கட்டுப்படுத்தும் திறனுடையதுஎனினும் அதைப் பயன்படுத்தாது.* அவன் விருப்பத்தை அவன் விருப்பப்படி பூர்த்தி செய்தபின் உடனே மீண்டும் தன் இருப்பிடம் வந்துவிடும்.

✡ தன்னையறிவதுஎனில் எவர் விருப்பத்தையும் அவர் கேட்பதுபோல் பூர்த்தி செய்யவல்லது.

✡ பிரம்மமாவதுஎனில் எந்த சந்தர்ப்பத்திலும் அந்த சந்தர்ப்பமாவது.

✡ *மனிதன் கேட்பதை பிரம்மம் - நிலைக்கேற்ப - எதிராகக் கொடுப்பதும் மனிதன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாகும்.*

உதாரணம்:-

1) எலக்ஷனில் நல்லவன், திறமையுள்ளவன் தான் ஜெயிக்க விரும்புகிறான்.

பிரம்மம் அதை அவன் நினைத்தவாறே பூர்த்தி செய்யும்.

2) நல்லவன், பெருந்திறமையுள்ளவன் வெற்றியைப் பற்றியே நினைக்காவிட்டால் பிரம்மம் அவனுக்குப் பெருவெற்றியைத் தருகிறது.

3) திறமையே இல்லாதவன் நல்ல இலட்சியமுடையவனானால், பிரம்மம் அவனுக்கு அபரிமிதமான வெற்றியைத் தருகிறது.

4) எதுவுமற்றவன், எந்தத் தகுதியுமற்றவனானால், அவன் எதைப் பற்றியும் நினைக்காவிட்டால் எலக்ஷனில் பிரம்மம் அவனுக்கு முழுத்



தோல்வியுடன் டெப்பாசிட்டை இழக்கச் செய்கிறது.

5) திறமையுள்ளவன் எதிரி டெப்பாசிட்டை இழக்க விரும்பினால், பிரம்மம் அதை அவனுக்கே நடக்கும்படிச் செய்கிறது.

6) திறமையற்றவன் நல்ல எண்ணமில்லாமல் பிறர் எலக்ஷனில் பெரு வெற்றிபெற வேண்டும்எனப் பேசினால் எதிரிக்குப் பெருவெற்றி கிடைக்கிறது.

7) உலகில் பிரம்மம் செயல்படும்பொழுது ஒருவரால் அடுத்தவர் உள்ள இரகஸ்யத்தை ஏற்று அது பலிக்கும்படி செயல்பட்டு, தான் அந்த சந்தர்ப்பத்திலிருந்து விலகும். *செயலால் பிரம்மம் பாதிக்கப்படாது.*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உண்மையற்ற நல்ல குணம் எந்த உருவத்திலிருந்தாலும் அகந்தையின் கருவியாகும்.

***நல்லதும் அகந்தையின் கருவி.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

போட்டிக்கு நிற்கும் எதிரிகள் உதாசீனம் செய்தால் அல்லது எதிர்த்தால் வெற்றி நிச்சயம்.

# மனிதனும் மிருகமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

சியாமளா ராவ்

பத்து நாட்கள் கடந்துவிட்டன. ஆனாலும் தெளிவாகவேயிருந்த சீனுவை, பாடம் சொல்லித் தந்த தாத்தாதான் அழைத்தார்.

''சீனு... உன்னோட மார்க்ஸைப் பார்த்து, அந்தப் பெரிய காலேஜுல உனக்கு இடம் கிடைச்சிருக்குடா. அந்த காலேஜ் 'பிரின்சிபால்' எனக்குத் தெரிஞ்சவரானதால, அவர் உன்னைப்பத்தி, உன் மார்க்ஸ் பத்தி ரொம்ப புகழ்ந்து பேசினார். ஆனா... நான்... உன்னை எனக்குத் தெரியும்னு சொல்லலேப்பா... ஆனா... மனசுக்குள்ள ஒரே சந்தோஷம். பாட்டிக்கும் சந்தோஷம்டா. இதோ பாரு உனக்காக ஸ்வீட் செஞ்சு வச்சுருக்கா. எடுத்துக்கோ... ம்...''

மிக மகிழ்வோடு சொன்ன தாத்தாவையும், பாட்டியையும் வணங்கியவனின் விழிகளில் நீர்த்திவலைகள் சந்தோஷத்துடன் உருண்டு, அவன் கன்னக் கதுப்புகளில் ஆட்டம் போட்டது.

தட்டிலிருந்து எடுத்த ஸ்வீட்டைக் கையில் எடுத்தவுடன், ஒரு வினாடிக் கண்களை மூடி, அன்னை, ஸ்ரீ அரவிந்தரை நினைத்தான். அவர்களுக்கு சமர்ப்பணம் செய்து, பின் தாத்தா, பாட்டி இருவருக்கும் கொஞ்சம் விண்டு கொடுத்துவிட்டுப் பின் அவன் சாப்பிட்டான்.

''பாட்டி... ரொம்ப, ரொம்ப டேஸ்டாயிருக்கு பாட்டி. இதுவரை நான் இப்டி ஒரு ஸ்வீட்டை சாப்டதில்லே. ரொம்ப, ரொம்ப நன்னாயிருக்கு பாட்டி...''

சந்தோஷத்தோடு சொல்லும் சீனுவைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டவள், ''சீனு, நான் ஒரு டப்பாவுல போட்டுத் தரேன். அம்மாகிட்ட கொடுத்துடறியாப்பா. நான் எல்லோருக்குமாத் தான் பண்ணியிருக்கேன். அதனால எடுத்துண்டு போறியா...''

''இதோ பாரு... சீனுவோட நீயும் அவாத்துக்குப் போய், எல்லோருக்கும் கொடுத்துட்டு வா... போ. சீனு நம்பாத்துப் பிள்ளை மாதிரி... மாதிரியென்ன, நம்ம பேரன்கள்தான் அவா ரெண்டு பேரும். போ... ரெண்டு குழந்தைகளும் நன்னா படிக்கிறா. அவா எத்தனை படிச்சாலும் அதுக்கு நாம துணையாயிருக்கணும் சரியா... போ... நானும், கதவைப் பூட்டிவிட்டு வரேன்... மொதல்ல போங்கோ... சரியா...''

கணவன், மனைவி இரண்டு பேருமே தன்னந்தனியாக, ரெட்டைக் குருவிகள் போலிருக்கும் அவர்களுக்கு, பார்வதியின் சமையலும், அவளின் அமரிக்கையான குணமும் பிடித்துப் போக, அப்படியே குழந்தைகளின் டியூஷனும், இன்னும் அவர்கள் உறவை இறுக்கிப் பிணைத்ததில், ஒரு குடும்பம் போல் ஆகிவிட்டார்கள் என்பதுதான் நடந்தது.

அனைவருமே ஊதுபத்தி ஏற்றி, உட்கார்ந்து தியானம் செய்தார்கள்.

நல்ல உள்ளங்களின் தியானம், எந்தவிதமான மிகச்சிறிய இடையூறுகள்கூட இல்லாமல், அதீதமான அமைதியுடன், ஆழ்ந்த தியானமாக அமைந்தது. காற்றின் சலசலப்போ, தெருவில், விற்போர்களின் குரல்களோ, நாய், பூனைகளின் கத்தலோ, வேகமாகச் செல்லும் வண்டிகளின் 'ஹார்ன்' சத்தமோ... ம்... ஹூம்... எதுவுமேயில்லாமல் அமைதிஎன்றால், பேரமைதி அந்த வீட்டை மட்டுமன்று, தெருவைச் சுற்றி சூழ்ந்திருந்ததுதான் மிக ஆச்சரியம். அதுவும் அனைவரின் மனதிலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் தவிர வேறெந்த எண்ணமுமில்லாததால், தடையேதுமின்றி அரை மணி நேரம் நடந்தது.

ஒவ்வொருவராய் வணங்கி எழுந்தார்கள். ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் எண்ணமேயில்லாமல், ஒரு பரவச நிலையில் இருந்தனர். சந்தோஷமும், கற்பனைக்கும், சொல்வதற்கும் எட்டாத, ஓர் உன்னதமான நிலையை அனுபவித்தார்கள். மனம் ததும்பியதில், அங்கு மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது.

கீதாதான் எழுந்தாள், எல்லோருக்கும் எலுமிச்சம்பழத்தில் ஜூஸ் செய்து தந்தாள்.

''மாமா, மாமி, இன்னிக்கு எங்களோடவே டிபன் சாப்பிடுங்களேன். எல்லோருமா பிரார்த்தனை செஞ்சோம். அதே போல டிபனையும் எல்லோருமா சாப்பிடலாமே... சரியா... என்ன ஏதாவது... தப்பா...''

''நன்னாயிருக்கு... யார் சொன்னா தப்புன்னு? தனியா ரெண்டு

பேருமா, தினமும்தான் சாப்டுட்டுண்டு இருக்கோமே... இன்னிக்கு எல்லோருமா சேர்ந்து தியானம் பண்ணி, சேர்ந்து சாப்பிடறது ரொம்ப சந்தோஷமாயிருக்கு. சரி... ஓ...கே...''

மாமா மகிழ்வோடு சொன்னதும், சட்டென பார்வதியினுள்ளே 'பளிச்'சென மின்னல் போல் ஓர் எண்ணம் தோன்றி, தீட்சண்யமாய் நின்றது.

''மாமா... நீங்களும் மாமியும், நான் ஒண்ணு சொன்னா கேட்பேளா? உங்க விருப்பம்தான். ஆனாலும் எனக்கு என்னமோ இன்னிக்கு இதைக் கேட்கணும் போலிருக்கு. சொல்லவா?''

''என்னமா நீ... நாந்தான் எம் பொண்ணு மாதிரின்னு சொல்லிட்டேனோல்லியோ... இன்னுமா... தயங்கணும்... சொல்லும்மா பார்வதி...''

''மாமா... நீங்களும் மாமியும், தினமும் சாயந்திரம் இங்கேயே வந்துடுங்கோ. எல்லோருமா ப்ரேயரும், மெடிடேஷனும் செஞ்சுட்டு, அப்படியே பலகாரமும் பண்ணிட்டு, வீட்டுக்குப் போலாமே. காலம்பற வேளைதான் வீட்டுலேயே சாப்பிடறேள். சாயந்திரத்தில் எல்லோருமா சேர்ந்து... பேசிண்டு சாப்டா, உங்களுக்கும், மாமிக்கும் சந்தோஷம், எங்களுக்கும் திருப்தியும், சந்தோஷமுமாயிருக்குமே... மாமி... என்ன சொல்றேள்?...''

மாமி, சட்டென்று எழுமுன், ''பாட்டி... பாட்டி... அம்மா சொல்றது போல தினமும் சாயந்திரமா வாங்களேன். எல்லோருமா சேர்ந்து சாப்பிடலாமே. எனக்கும், ராமுவுக்கும் கூட சந்தோஷமாயிருக்கும். தாத்தா... சரின்னு சொல்லுங்கோ தாத்தா... தாத்தா... பாட்டி... சொல்லுங்கோ''.

சீனுவும், ராமுவும், தாத்தா, பாட்டி, எனக் கூப்பிட்டபடி, அன்பின் பரிதவிப்போடு கேட்டபோது, இருவரும் மறுக்க இயலாமல், நெகிழ்ச்சியோடு சம்மதம் சொல்ல, குபீரென்ற சந்தோஷம் அங்கு வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வீடுபோல் பளிச்சென்றானது.

❀❀❀

மாமி, மாமா, இருவரும் மாலையில் வர ஆரம்பித்ததிலிருந்து, அனைவரின் மனதிலும் சந்தோஷம் பொங்கியது.



''அம்மா! அன்னையோட சிரிப்பு, இப்போ அதிகமாயிருக்காப்பல தோணறதோன்னோம்மா... பாரேன் எப்படி சிரிக்கிறாள்னு. நாமள்ளாம் சேர்ந்து தியானம் பண்றது, ரொம்ப பிடிச்சுப் போச்சும்மா 'அன்னைக்கு'. இல்லையாம்மா?''

ராமு கூறியதும், கீதா அப்படியே அவனைக் கட்டிப்பிடித்தாள்.

''ராமு, எனக்கே ரொம்ப சந்தோஷமாயிடுத்துடா. நான் சொல்றதுக்குள்ளே நீயே சொல்லிட்டே. சமத்துக் குட்டிடா... அக்கா, நிஜத்துல அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் எனக்கு ரொம்ப நல்ல வழியக் காட்டியிருக்காங்கறதுதான் ரொம்ப சத்தியமாய் உணர்றேன். என்னோட இத்தனை கால வாழ்க்கையில, நான் சாப்பிடற சாப்பாட்டை நிம்மதியா, திருப்தியா, வயிறு ரொம்ப சாப்பிடறேங்கான்னா... அது இப்பத்தான். வாழ்க்கைங்கறது ஒரு சக்கரம்தான். ஆனா, அந்த சக்கரத்தோட சுழற்சி, எப்பப்ப, எப்டி சுத்தும்கறது நம்ம கையில கிடையாது. அப்டி நம்ம கையிலயிருந்திருந்தா... அந்த சக்கரத்தை நம்ம இஷ்டத்துக்கும், விருப்பத்துக்கும், ஆசைக்கும், கன்னாபின்னான்னு சுத்தி, அதையும் சங்கடப்படுத்தி, நாமளும், ஒரு இலக்கு இல்லாம சுத்திண்டிருப்போம். இப்போ மாமா, மாமியும் வரது... என்னோட அப்பா, அம்மாவே வந்துட்டாப்பலயிருக்குக்கா. அக்கா... பசிக்கு உங்க வீட்டுக்கு வந்தேன்... ஆனா... இங்கே ஒரு பெரிய குடும்பமே என்னை சுத்தியிருக்கு. இது போறும்கா. அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும், எனக்கு பாட்டியும், தாத்தாவும்தான்... ஆமாங்கா... எனக்கு தூக்கம் வராட்டா... அவா எதிர்க்கால போய் உக்காருவேன். அவாளோட என் மனம் தொறந்து பேசுவேன். அவாளும் நிச்சயமா அதைக் கேட்பா... ஆமாங்கா... அவா ரெண்டு பேரும் என்னை, அன்போட, மனசுல அரவணைப்போட பார்க்கறது என் மனசுக்குத் தெரியும், புரியும். இது பொய்யில்லே... நிஜம். சந்தோஷமா மனசு ரொம்பிடும். எனக்கு எந்தவிதமான கவலையோ, என் பழைய வாழ்க்கையைப் பத்தியோ... ம்...ஹும்... இதுவரை என் ஞாபகத்துலயும் வரலே, அதை அலசிப்பார்க்கவும் தோணலே. ஏன்னா, அது என்னோட வேலையில்லே. என்னை, கஷ்டத்துலேருந்து விடுதலைக் கொடுத்து, எப்பேர்ப்பட்ட இடத்துல சேர்த்துருக்கா ரெண்டு பேருமா. அது சும்மாவா! மனசு பொங்கிப் பொங்கி, எப்பவும் அவா ரெண்டு

பேரையும் என் மனசுலேயே பிரதிஷ்டைப் பண்ணிட்டேனே... பாருங்கோக்கா... எப்படி... ஒரு நல்ல ஜபமாலையைப் பார்த்துப் பார்த்து வாங்கறோமோ, அப்படியொரு கூட்டுக் குடும்பமா, ஒவ்வொருத்தரா வந்து சேர்ந்துட்டோம். ரொம்பவே சந்தோஷமாயிருக்குக்கா... அன்னையும், ஸ்ரீ பகவானும் என்னென்னிக்கும் நம்மை இந்த மகிழ்ச்சியோடவே வைப்பார். நிச்சயமாத்தாங்கா சொல்றேன்... மாமா... மாமி... இன்னிக்குப் போல தினமுமே வரது நமக்கு சந்தோஷந்தான். அதுவும் இன்னிக்கு மாமி செஞ்சுண்டு வந்த 'ஸ்வீட்'... ம்ம்... என்னமா... வாயில போட்டா கரையறது. மாமி... உங்க நல்ல மனசைப் போலவே சுத்தமான நெய்யும், உங்க நல்லவிதமான பேச்சைப் போலவே சர்க்கரையுமா கலந்து செஞ்ச இந்த இனிப்போட சுவை அதீதமாயிருக்கு மாமி. அதுவும் அன்னை, ஸ்ரீ அரவிந்தருக்கு அர்ப்பணிச்சுட்டு நாம எடுத்துக்கறோமில்லையா, அதனால சுவையும் கூடிப் போயிருக்கு மாமி. இன்னிக்கு 'அபரிமிதம்'னு சொல்ற அளவுக்கு, எல்லாமே மனசை அப்படி ஆக்ரமிச்சிருக்கு. 'எல்லாம் நன்மைக்குத்தான்' மாமி....''

''அதெல்லாம் சரி... இந்த 'ஸ்வீட்' இன்னிக்கு அன்னைக்கும், ஸ்ரீ அரவிந்தருக்கும் கொண்டு வச்சதுக்குக் காரணம் தெரியுமா... ம்... சொல்லேன் கீதா...'' மாமி கேட்டாள்.

யோசித்தவள்... ''தெரியலையே...''

''சீனுவுக்குப் பெரிய இன்ஜினியரிங் காலேஜுல இடம் கிடைச்சுருக்கு. அந்த காலேஜ் பிரின்சிபாலே மாமாகிட்டே சொல்லியிருக்கார். அவனோட மார்க்ஸைப் பத்தி புகழ்ந்து பேசியிருக்கார். 'நானும், உன்னைத் தெரியும்னு சொல்லலேப்பா... ஆனா, அவர் புகழ்ந்து பேசப் பேச என் மனசுக்குள்ளே ஒரு பெரிய அலையே புரண்டு, புரண்டு, குதி போட்டதுன்னு', சீனுகிட்டே சொல்லும்போது... எனக்கும் மனசு பொங்கித்தான் போச்சு. நிச்சயமா... அவனுக்கு 'ஸ்காலர்ஷிப்' கிடைச்சுடுமாம். அதையும் மாமா விசாரிச்சுட்டார். அதனால... எல்லாமே... அன்னையோட ஆசீர்வாதங்களும், அவங்களோட பார்வையில இருக்கிறதும்தான்னு புரிஞ்சுடுத்தோன்னோ கீதா...''

கீதா... மீண்டும் கண்கள் பொங்க, இரு கரம் கூப்பி ''அன்னை,



ஸ்ரீ அரவிந்தரை'' வணங்கினாள்.

❀❀❀

மாமா, மாமியின் வருகை, இப்போது காலையிலும் ஆரம்பமாகியது.

''இதோ பாரு, பார்வதி, ரெண்டு பேரும் அங்கே தனியாயிருக்கிறது அலுத்துப்போச்சு. இன்னொண்ணு, இந்த ஆறு மாசத்துல நானும், மாமாவும் ரொம்ப யோசிச்சு, அன்னைகிட்டேயும், ஸ்ரீ அரவிந்தர்கிட்டேயும் 'பர்மிஷன்' கேட்டோம். அதுக்கு என்னமா... பதில் வந்ததுன்னு நினைக்கறே! தேகம் முழுசுமா புல்லரிச்சுப் போச்சுடி கீதா. மாமி... உங்க வீட்டுல ஸ்ரீ அரவிந்தரையும், அன்னையையும், நீங்க மட்டும் வணங்கிண்டிருந்தேள். அப்புறமா பார்வதியும், குழந்தைகளும் வந்தா. கொஞ்ச நாளுல கீதாவும் வந்தா, நாங்களும் இங்கே ராத்திரி சாப்பாடும், காலையில வீட்டுலயுமாயிருக்கோம். பார்வதி... எங்காத்தையே... ஸ்ரீ அரவிந்தருக்கும், அன்னைக்கும் கொடுத்துடலாம்னு இருக்கேன். இனிமே அந்த வீடு, அவா ரெண்டு பேருக்கும்தான் சொந்தம். மாமி... நான் சொன்னதுல ஏதாவது தவறிருந்தா சொல்லுங்கோ... ஏன்னா, இந்த ஆறு மாசத்துல இங்கே வந்து சாயந்திரத்துலே எல்லோருமா சேர்ந்து பண்ணின தியானத்துல, ஒரு நாள் 'பளீர்'னு ஒரு வெளிச்சம் வந்தது போல இந்த எண்ணம் எனக்குத் தோணித்து. உடனே இவர்கிட்டே சொல்லணும்னு போனா, அவரோ... கையில 'புஷ்பாஞ்சலி'ங்கற புஸ்தகத்தைப் படிச்சுண்டு இருந்தார். சட்டுனு நானும் ஒரு புஸ்தகத்தை எடுத்தேன். தலைப்பு என்ன தெரியுமா? 'ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம்'. அதுல அன்னையோட நான்கு அம்சங்களைப் பத்தியும் படிச்சேண்டி பார்வதி. 'மஹேஸ்வரி', 'மஹாகாளி', 'மஹாலக்ஷ்மி', 'மஹாசரஸ்வதி'ன்னு எழுதியிருக்கறதைப் படிச்சா, இந்த நான்கு அம்சங்களின் விளக்கம், என்னமாயிருக்கு கீதா. நமக்கும் கொஞ்சம் தெம்புயிருக்கிறபோதே, எல்லாத்தையும் தீர்மானம் பண்ணனும்னு நினைச்சவுடனேயே... 'ஜிவ்'வுனு ஒரு ஆனந்தம். அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் மாறி, மாறி, பார்த்தேன். அற்புதமாயிருந்தது. அதுக்கப்புறம் என்ன தாமதம்னு தோணித்து. எதுக்கும் உங்ககிட்டேயும் சொல்லிடலாம்னுதான்

வந்தேன். சரியா?... நீங்க மூணு பேரும் என்ன சொல்றேள்...?''

மூவரும் ஓடி வந்து மாமியின் கரங்களைப் பிடித்துக் கொண்டனர். சந்தோஷம் பொங்கியது.

சீனுவும், ராமுவும், சொன்ன மாமியின் பாதங்களில் வணங்கினர். ''பாட்டி... பாட்டி... அன்னை, ஸ்ரீ அரவிந்தருக்கே ஒரு வீடு முழுவதும்னா எவ்வளவு சந்தோஷமாயிருக்கு தெரியுமா? நிறைய பூக்களைப் பறிச்சுண்டும், வாங்கிண்டும் வந்து தட்டுல அடுக்கலாம். ஊதுவத்தி நிறைய ஏத்தலாம். பாட்டி... ஒவ்வொரு ரூமுலயும் அவா ரெண்டு பேரும் இருக்கும்படியா பார்த்துக்கணும். பாட்டி, நானும், ராமுவும், காலம்பற எழுந்து உங்காத்துக்கு வந்துடறோம். எதுக்கு தெரியுமா? தினமும் அந்த பூக்களைத் தட்டுல அடுக்கறதுக்கு மட்டுமில்லே... மொத நாள் தட்டுல வச்ச பூக்களையெல்லாம், ஒரு கவர்ல போட்டு, யாரும் மிதிக்காத எடத்துலயோ... இல்லேன்னா... ஒரு மரத்தடியிலயோ போட்டுட்டு வருவோம். வீட்டைப் பெருக்கி, துடைச்சு, தட்டு அலம்பறதையெல்லாம் நாங்க ரெண்டு பேரும் பார்த்துக்கறோம். பூக்களை, நீங்களும் மத்தவாளும் பாத்துக்கோங்கோ... சரியா... சீக்கிரமா எழுந்து, வெளியிலேருந்து... பூக்களையும் பறிச்சுண்டு வந்துடறோம்... சரியா...''

இரண்டு பேரையும் அணைத்தபடி ஆனந்தக் கண்ணீர் விட்டாள் மாமி.

''இதோ பாருங்கோ... அன்னைக்கு நீங்க சேவைன்னு செய்யிறது சந்தோஷந்தான். ஆனா... நீங்க ரெண்டு பேருமா, இவர்கிட்டே தினமும் பாடம் சொல்லிக்கணும். புரிஞ்சுதா?''

''நிச்சயமா... கண்டிப்பா... அது சரி... ஹால்ல எடம் போறுமா? நிறைய பேர் வந்தா என்ன செய்யிறது?...''

ராமுவின் கேள்விக்கு, அப்படியே, தன்னோடு சேர்த்து அணைத்து உச்சி மோந்தாள் மாமி.

''ராமு... அன்னை... எத்தனை சூசகமா உன்மூலமா கேள்வி கேட்டுட்டா பார்த்தியா? நிச்சயமா ஏதாவது வழி புலப்படும். அன்னை நமக்குக் காட்டுவாங்கற நம்பிக்கை எனக்கு இருக்குடா''.

''பாட்டி... நாம ஒரு ரூமை மட்டும் 'ஆபீஸ் ரூமா' வச்சுக்கணும். ஏன்னா... அன்னையைப் பத்தின புத்தகங்களை நிறைய வாங்கி வைக்கணும். மாதாந்திர புத்தகம் 'மலர்ந்த ஜீவியம்' வாங்கி



வைக்கணும்''.

''ம்... அப்புறமா... சொல்லுடா... சொல்லு...''

''ஊதுவத்தியும் எப்பவும் நாம வச்சிருக்கணும். வரவா கேட்டா, நாம இல்லைன்னு சொல்லாமயிருக்கணும் பாட்டி... அதுக்கான ஏற்பாடுகளை நாம மொதல்ல செய்யணுமே... எப்படி பாட்டி?''

''எல்லாத்துக்கும் அன்னையே வழி செய்வார்டா. பாரு வேணும்னா... எப்படியாவது நம்ம விருப்பம் நிறைவேற அன்னையையே வேண்டிக்கலாமே... இன்னொண்ணு... அந்தாத்துலேருந்து அன்னை, ஸ்ரீ அரவிந்தரோட படத்தைக் கொண்டு வந்து வச்சுக்கலாம். ஏன்னா, அங்கே ஆறு படங்களிருக்கு. ரொம்ப நாளா, மாமியும் ஆராதிச்சு, நாமள்ளாமும் சேர்ந்து பிரார்த்தனை செஞ்சது. அவா ரெண்டு பேரும் இங்கே வந்தாலே... எல்லாமே சரியா நடக்கும்டா... அதுக்கும் அவாளே துணையா வருவா...''

''சரி பாட்டி... எல்லாமே அன்னையும், ஸ்ரீ அரவிந்தருமே ஏற்பாடு செய்வா. நாம அவங்களையே பிரார்த்தனை செஞ்சுப்போம். நீங்க சொல்றதுதான் சரி பாட்டி. வரட்டுமா...''

❀❀❀

''நாம எல்லாமே யோசனை செஞ்சோம். ஆனா ஒரு தியான மையம்னு ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி, என்னென்ன, எப்படியெப்படி, எந்தெந்த வேளையில செய்யணும்கறதை, தியான மையம் வச்சுருக்கிறவாளைக் கேட்டு, சரியாச் செய்யணும். நம்ம இஷ்டத்துக்கு நடந்துக்கக்கூடாது. ஏன்னா, நம்ம வீட்டுல நாம அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் வச்சுண்டு, நாம பிரார்த்தனையையும், பூக்களையும் வச்சு, ஆராதிக்கறது வேறே. பல பேர் வர, வழி செய்யிற நாம், அதுக்கானதை சரியானபடி யோசிச்சு, சரிவர செய்யணும். புரிஞ்சுதா...'' மாமா கூறவும், மற்றவர்களும் ஆமோதித்தனர்.

''யாரைக் கேட்பது? எப்படிச் செய்வது? எந்தெந்த நேரம்? தினமும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் 'ஸிம்பல்' வைக்கணுமா? இல்லே முக்கியமான நாட்களில்மட்டும் போதுமா?'' இப்படி பல யோசனைகள் எல்லோர் மனதிலும்.

மாமா கூறினார், ''இதோ பாருங்கோ... நாம எல்லோருமா

அன்னையையே வழிகாட்டும்படி பிரார்த்தனை செய்வோம். நிச்சயமா நமக்கு ஒரு வழி கிடைக்கும். வாங்கோ... எல்லோருமே சேர்ந்தே அன்னையோட பாத சரணங்களையே நினைச்சுண்டு தியானம் செய்வோம். வாங்கோ...''

எல்லோருமாக, ஆளுக்கொரு ஊதுபத்தியை கையில் ஏற்றியபடி அன்னையின் படத்திற்கு முன் நின்று வேண்டி, ஊதுபத்தி ஸ்டாண்டில் வைத்தனர்.

தியானம் ஆரம்பித்தது. ஆடாமல், அசையாமல் அமர்ந்திருந்த அவர்களின் மனம் அன்னையை வேண்டி, அவரிடமே லயித்தபடியிருந்தது. எத்தனை நேரம் என்பதை அவர்கள் உணர்ந்தாரில்லை.

யாரோ கதவைத் தட்டும் சத்தம் பலமாகக் கேட்டது.

சட்டென கலைந்தனர். ராமுதான் எழுந்து, அன்னையை வணங்கி பின், வாசற்கதவைத் திறந்தான். புதியவராகயிருந்ததில் ஒரு தயக்கம் ராமுவுக்கு. ஆனாலும்... ''வாங்கோ... உள்ளே வாங்கோ...'' என்றபடி அவனும் உள்ளே வர, அந்த மனிதரும் உள்ளே வந்தார்.

''அட, அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் இங்கேயும் இருக்காளே... ரொம்ப நன்னாச்சு. மனசுக்கு சந்தோஷமாவும், திருப்தியுமாயிருக்கு... நான் ஒரு அஞ்சு நிமிஷம் தியானம் பண்ணலாமா?''

''ஓ... தாராளமா... ம்... பண்ணுங்கோ. ராமு... ஊதுவத்தி ஏத்தி அவரிட்ட குடுப்பா...''

ராமுவும் அவரிடம் தர, அவரும் தியானத்தில் அமர்ந்தார். சுமார் அரை மணி நேரத்திற்கு மேலேயே அமர்ந்திருந்தார். யாரும் ஒரு சின்ன சப்தம் கூடயில்லாமல் நடந்து கொண்டனர்.

நிதானமாக எழுந்தவர், சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். சிரித்த முகத்துடன் அவர் மீண்டும் அவர்களெதிரில் அமர, கீதா ஒரு டம்ளர் பால் எடுத்து வந்து தந்தாள். அதை எடுத்துக் கொண்டவர், ஏதோ சொல்ல வேண்டும் என்பது போல், எல்லோரையுமே பார்த்தார். இவர்களும் பேசாமல் இருந்தனர்.

''நீங்க எல்லாருமே ரொம்ப சாந்தமானவாளாயிருக்கேள். எனக்கு ரொம்ப நன்னா இன்னிக்கு 'தியானம்' லயிச்சு செய்ய முடிஞ்சுது. நான் எப்படி... வந்து உங்காத்துக் கதவை, ஏன் தட்டினேன்னு இது வரைக்கும் புரியலே. ஆனா... ஒண்ணே



ஒண்ணுமட்டும் ரொம்ப நன்னா, மனசுக்கு இதமா புரிஞ்சுடுத்து. அதுவும், அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும்தான் என்னை இங்கே வரச் சொல்லியிருக்கான்னு புரிஞ்சுண்டேன். ஆமாம்... நான் சொல்றதை உங்களால கேக்க முடியுமா? நேரம் இருக்குமா? இல்லேன்னா... வேண்டாம்... சரி வேண்டாம்...''

வந்தவர் பேசி முடிக்கும் முன், பார்வதி உடனே கூறினாள்.

''மாமா! நீங்க பெரியவர். நீங்க என்ன சொன்னாலும், பேசணும்னாலும் பேசலாம் மாமா. ஏன்னா... நாங்க எல்லாருமே, அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வணங்கறவாதான். அதனால எது வேணும்னாலும் கேக்கலாம், பேசலாம். தயக்கமே வேண்டாம். சொல்லுங்கோ...''

''ஒண்ணுமில்லேம்மா... எனக்கு ஒரு ஆசை. ஆனா, அதை எங்காத்துல நிறைவேத்த முடியாது. ஏன்னா... முடியாதுதான். ஆனா... என் ஆசையை... எப்படியாவது நிறைவேத்தணும்னு மனசுக்குள்ள ஒரு எண்ணம், பெரிசா... ஒரு சுழற்சியா சுத்திண்டிருக்கு. இப்டி காலாற, என் எண்ணத்தை மனசுல சுழல வச்சுண்டு வந்தவன், ஏன் உங்காத்துக் கதவைத் தட்டினேன்னு புரியலே... தெரியவுமில்லே. ஆனா... நிஜம்மா சொல்றேன்... எனக்குள்ள ஒரு உந்துதல் இருந்ததால்தான் உங்காத்துக் கதவைத் தட்டியிருக்கேன். வந்ததும், என்ன சொல்றது? எப்படிப் பேசறது? புரியலே... ஏந்தெரியுமா? உங்காத்துல ''சம்பிரமமா'' உக்காந்துண்டு, சிரிச்ச முகத்தோட-யிருக்கிற அன்னையையும், அமைதியா, சாந்தமான முகத்தோட-யிருக்கிற ஸ்ரீ அரவிந்தரையும் பார்த்தவுடனேயே, அதுவும் நீங்கள்ளாம் 'தியானம்' செய்யிற நேரத்துல வந்துருக்கேனே... என்னை இப்டி... இங்கே அழைச்சுண்டு வந்ததே இவா ரெண்டு பேருந்தாம்மா... இவா ரெண்டு பேருந்தான்... ஆமாம்மா... ஆமாம்...'' சொல்லியவர் அடக்கிய விம்மலோடு, கண்கள் நிறைந்து பெருக, உதடுகள் துடிக்க, முகம் சிவந்து, மீண்டும் கரங்கூப்பி, வீழ்ந்து வணங்கினார்.

வந்தவரின் உணர்ச்சிகள் நிறைந்த வார்த்தைகள் இவர்களையும் ஆட்கொண்டன. ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

''அம்மா! நீங்கள்ளாம் தப்பா என்னை நினைச்சுக்காதீங்கோ. எனக்கு... எனக்கு...'' மேலே பேச முடியாமல் திணறினார்.

சட்டென மாமா, அவரருகில் அமர்ந்து ஆசுவாசப்படுத்தினார்.

''உங்க மனசுல என்னமோ சொல்லணும்னு தோணறது. எதுவானாலும் சொல்லுங்கோ. தயக்கம் வேண்டாம்... ஏன்னா... நாங்க எல்லாருமே ஒரே குடும்பம் போலத்தான். யாரும் தப்பா நினைச்சுக்கமாட்டா...''

''நான் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும், மனமார நேசிச்சு, மெய் சோர வணங்குறவன். ஆனா... என் வீட்டுல... அதைக் கடுமையா எங்குடும்பமே எதிர்த்து நின்னுட்டா. என்னோட அலமாரியிலதான் இவா ரெண்டு பேரையும், வச்சுண்டு பிரார்த்தனை பண்றேன். ஊதுவத்தி கூட ஏத்தறதில்லே. இந்த விஷயத்துல சாம, தான, பேத, தண்டமும் பண்ணிப்பார்த்தாச்சு. ஆனா, அது தப்புன்னு புரியறது. யாரையும், புண்படுத்தக்கூடாது, விருப்பமில்லாதவங்களை வற்புறுத்தக் கூடாதுங்கறதை மறந்து, அவாளோட வீண் தர்க்கம், அனாவசிய விவாதம், கோவம்னு நான் நடந்துண்ட முறை ரொம்ப தப்புன்னு புரிஞ்சுடுத்து. ஆனா, அன்னை, ஸ்ரீ அரவிந்தரை என் மனசுக்குள்ளேயே பிரார்த்தனை பண்ணிண்டிருந்தேன்.

''நல்ல வழி காட்டணும். அன்னை பக்தர்கள்ள யாராவது ஒருத்தரையாவது எனக்கு காண்பிச்சு விடுங்கோம்மான்னு...'' அனுதினமும் வேண்டிண்டேன். ஏன் தெரியுமா? என்னோட உயிர் நண்பன் ஒருத்தன் சொன்னது ஞாபகத்துல வந்தது. பாண்டியில இருக்கிற ஒரு ''அன்னை பக்தரான மகான்'' கல்யாணமாகி கணவன் வீட்டுக்குப் போகறதுக்கு முன்னாடி அந்தப் பெண்ணிற்கு அவர்கிட்டே வணங்கினவளுக்கு ஆசீர்வாதம் பண்ணி கூறியது என்ன தெரியுமா?

''உன்னோட புக்ககத்துல அவாள்ளாம் எந்த தெய்வங்களையும் வணங்கலாம். நீ... அதை மறுக்கக்கூடாது. அன்னை, ஸ்ரீ அரவிந்தரை தியானிக்கும் உனக்கு, உன் மனதிலேயே பிரதிஷ்டை பண்ணி வேண்டிக்கோ. அவர்கள் அனுமதியுடன்தான், நீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் படங்களை வைத்து வணங்க வேண்டும். 'சுமுகம்'தான் முக்கியம். புரிந்ததா'' என்றார்.

இந்த வார்த்தைகளை தேவவாக்காக அந்தப் பெண் ஏற்றுக்கொண்டு நடந்ததில், நடந்த அதிசயம்! அந்தப் பெண்ணின் வீடு, இப்போது ''அன்னையின் சென்டரா'' மாறியிருக்கு. இதுவும் அன்னையின் அற்புதங்களில் ஒண்ணுதானே! அப்ப, ஏன், என் வீட்டை அப்டி செய்யக்கூடாதுன்னு நீங்க கேட்கலாம். அது... அது...



ம்...ஹும் வேண்டாம்... அந்தப் பேச்சை விட்டுடுவோம். எப்போ அவா அன்னைக்கு அருகே வராளோ வரட்டும். ஆனா, எனக்கு வயசு ஏறிண்டிருக்கு. அதற்குள்ள ஒரு ''அன்னையின் தியான மையம் ஆரம்பிச்சுடணுங்கற ஆசை. அதனாலதான்... அதனாலதான்...'' மேலே பேச்சுக்கள் வராமல் கண்கள் மல்க நின்றார்.

ஆனால் இவர்களோ... அன்னையின் அன்றாட அற்புதங்களில் இதுவும் ஒன்று என மனம் நிறைந்து விகசித்து, விக்கித்துப் போய், கண்கள் தளும்ப, அனைவரின் முகங்களிலும் சந்தோஷம் பூரிக்க, அன்னையை நோக்கி மீண்டும் வணங்கி எழுந்தனர்.

''மாமா... நீங்க யாரு? உங்க பேரோ, ஊரோ... ஒண்ணுமே எங்களுக்குத் தெரியாது. ஆனா... நீங்க பேசின பேச்சுக்களும், உங்க ஆசையும்... ஆமாம் மாமா, அன்னையோட அற்புதங்கள், சத்தியமா சொல்றேன், தினம், தினம் எங்கெங்கோ நடந்துண்டிருக்குங்கறத உண்மைதான்னு, நிரூபிக்க, இதோ உங்களையே அன்னை, எங்காத்துக்கு அனுப்பியிருக்காளே... இதுல எதை சொல்றது... எதை... எப்படி... பேசறதுன்னு... அப்படியொரு ஆச்சரியத்தோடதான் நாங்க எல்லோருமே இப்ப இருக்கோம். நான் இப்டி பேசறது உங்களுக்குப் புரியாமயிருக்கலாம். ஆனா, எங்களுக்கு இது ரொம்ப ஆச்சரியத்தை மட்டுமல்ல, அன்னையோட அற்புதங்கள்... எப்டி... எந்தவிதத்துல, யாருக்கு வேணும்னாலும் நடக்கலாங்கறதுதான் நிஜமான சத்தியம். உங்களுக்குப் புரியறமாதிரி சொல்றேன்''.

''மாமா... நாங்களும் ஒரு 'தியான மையம்' ஆரம்பிக்கணும்கற ஆவலோடத்தானிருக்கோம். இதோ... இந்த தம்பதிகள்தான் அவா வீட்டையே அன்னை, ஸ்ரீ அரவிந்தருக்குன்னு அர்ப்பணிச்சுட்டா. இந்தாத்துலேருந்துதான் அன்னை, ஸ்ரீ அரவிந்தரை அழைச்சுண்டு போறோம். தினமும் மையத்தை சுத்தம் பண்றதும், முடிஞ்ச பூக்களைப் பறிச்சுண்டு வரதும், சீனுவும், ராமுவும் செஞ்சுடுவா. ஊதுவத்திகளை பாண்டியிலயிருக்கிற சென்டர்லேருந்து வாங்கிண்டு வந்துடுவோம். புத்தகங்களும் அப்படியேதான். ஒரு ரூமை மட்டும் ஆபீஸ் ரூமா வச்சுக்கலாம்னு இருக்கோம். நாங்க இங்கே 'கேட்டரிங்' பண்றதால அந்த வேலைதான் எங்களுக்கு மூலாதாரம்கறதால அதையும் விட முடியாது. ஆனா... இதோ இவா ரெண்டு பேரும்தான் தியான மையத்தைப் பார்த்துப்பா. நாங்களும் ஒவ்வொருத்தர் ஒவ்வொரு

நேரம் வச்சுண்டு, தியான மையத்தைப் பார்த்துக்கப்போறோம். உங்களுக்கும் ஏதாவது விஷயம் தெரிஞ்சுதுன்னா சொல்லுங்கோ... அதுபோலவே நடக்கலாம். சொல்லுங்கோ மாமா''.

வந்தவர், சட்டென எழுந்து... நெடுஞ்சாண்கிடையாக மீண்டும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் முன் வணங்கியவரின் கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பொங்கிப் பொங்கி வழிந்தது. அப்படியே அமர்ந்தார்.

''அன்னையே... உன்னோட விளையாட்டை, ஆனந்தமா எங்ககிட்டே காட்டிக் கொடுத்துட்டியேம்மா... அதனாலதான் இந்த வீட்டுக் கதவைத் தட்டும்படி செய்தாயா? நன்றியம்மா நன்றி... உன்னாலதான் இப்டியெல்லாம் செய்ய முடியும். என்னைக்கும் உன்னுடைய சரணத்தை விடமாட்டேன்னா... விடமாட்டேன். ஆமாம். எத்தனை அழகா எங்க எல்லோரையும் பிணைச்சு விட்டிருக்கே. இதே போல எப்பவும் எங்களுக்கு வழிகாட்டிண்டிருக்கணும்மா. இதுதான் என்னோட பிரார்த்தனை. அன்னையே சரணம்... அன்னையே சரணம்... அன்னையே சரணம்''.

முணுமுணுத்த உதடுகளினின்று வெளியான சின்னஞ்சிறு சப்தம் அடங்க, அப்படியே தியானத்தில் ஆழ்ந்தார். அவரின் பெயர் 'சத்தியன்'.

❀❀❀

சத்தியனின் உதவியுடன், வீட்டிலிருந்த சாமான்களை, இந்த வீட்டிற்குக் கொண்டுவந்தனர். வேண்டாதவைகளை கடைக்குப் போட்டனர். வீடு முழுவதும் சுண்ணாம்பு அடித்து, கதவுகளுக்குப் 'பெயிண்ட்' அடித்து, புத்தம் புதியதாக ஆக்கினர். பின்புறமிருந்த சுமாரான இடத்தில், புல்களைக் களைந்து, இருக்கும் பூச்செடிகளுடன், நர்ஸரியிலிருந்து வாங்கி வந்த செடிகளை, நன்கு உர மண்ணைக் கலந்து, நட்டு வைத்தனர். இதெல்லாம் செய்யும்போது கூடவேயிருந்த சத்தியன், தியான மையம் ஆரம்பிக்கும் முன், ஊருக்குப் போய்விட்டு வருவதாகக் கூறியவர், சரியாக இரண்டு நாட்களுக்கு முன் வந்தார். அவருடன் கூட வந்தது, பெரியதான பட உருவில் வந்தது, சாட்சாத் அன்னையும், ஸ்ரீ அரவிந்தருந்தான். ''அன்னையே சரணம், ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம:'' ''ஆனந்தமயி, சைதன்யமயி, சத்யமயி பரமே'' என்று கூறியபடியே



அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் உரிய இடத்தில் அழகாகக் கூடவே கொண்டு வந்திருந்த ஒரு ஸ்டாண்டில், பாந்தமாக அமர்த்தினர். உடனே ஊதுவத்தி ஏற்றி, அமர்ந்தவர்கள், எழுந்த போது நேரம் முக்கால் மணி நேரத்திற்கு மேல் ஆகியிருந்தது.

தியானத்திலிருந்து எழுந்து வணங்கிய பின், ஒருவரையொருவர் பார்த்து, மிதமிஞ்சிய சந்தோஷத்தை, முகத்தில் தேக்கி, சிரித்ததுடன் சரி. ஒரு வார்த்தைகூட பேசாமல், அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் கட்டுப்பாட்டிலிருப்பது போல் மகிழ்வோடு இருந்தனர். சரீரம் புளகிக்க, அவர்கள் மனம் வெகுவாக சாந்தத்தைத் தொடர்ந்தது.

''அன்னையும், ஸ்ரீ அரவிந்தருமே'' உயிர்ப்புடன் அவர்களைப் பார்த்து, எந்த மூலையில் நின்று பார்த்தாலும், இருவரின் கமலக்கண்கள் பார்த்து, சிரிப்பது போல் உணர, கண்கள் ததும்ப, அப்படியே இரு கரம் கூப்பி நின்றனர். அந்த நிலையிலிருந்து விடுபட எவருக்கும் விருப்பமேயில்லை. நகரவும் தோன்றவில்லை. அந்த ''விஸ்வரூப தரிசனம்'' அவர்கள் மனதை விட்டு அகலவேயில்லை.

அப்போதுதான் அழைப்பு மணி அடித்தது. ராமுவும், சீனுவும் எழுந்து சென்றனர்.

''கண்ணுங்களா... இப்பத்தான் மார்க்கெட்லேருந்து பூக்களையெல்லாம் வாங்கிகினு வந்துருக்கேன். மாலையா கட்டித் தரவா. இல்லே உதிரியாவே தரவா...'' கேட்ட அந்த வயதான மூதாட்டியுடன், பூக்களையும் பார்த்து, பேச வாயெழாமல், உள்ளே ஓடினர்.

''அம்மா! அம்மா! நம்ப இடத்துக்கு 'அன்னையே' வந்துட்டாப்பல, ஒரு பாட்டி கூடை நிறைய பூக்களை வச்சுண்டு வந்துருக்கா. வாம்மா... அம்மா... பார்க்கப் பார்க்க எனக்கு அன்னையையே பார்க்கறாப்பலயிருக்கும்மா. அம்மா... சந்தோஷமாவுமிருக்கு... பயமாவுமிருக்கும்மா... வாங்கோ... வாங்களேன்...'' கூடவே சத்தியனும் வந்தார்.

பெற்றவளின் கரங்களைப் பிடித்துக் கொண்டு வாசலுக்கு வந்தனர். சிரித்தபடி கூடையுடன் நின்றிருந்த அந்த முதியவளைப் பார்த்ததுமே, மனதுள் அப்படியொரு சந்தோஷம் பொங்க, இரு கரம் கூப்பினார்கள் இருவரும்.

‘‘இதோ பாருங்கம்மா இன்னிக்கு இருக்கிற பூக்களையெல்லாம் இங்கே குடுக்க முடியுமா? இல்லே வாடிக்கைக்காரர்களுக்குத் தரணும்னா, அதை வச்சுண்டு, மிச்சத்தைக் கொடுத்துடுங்கோ. எவ்வளவுன்னு சொல்லுங்கோ. அப்புறமா, தினந்தோறும் எங்களுக்கு பூக்களைத் தர முடியுமா? வாடிக்கையா தந்தா நல்லதும்மா. அன்னன்னிக்கு காசு தரணும்னாலும் சரி, இல்லே மாசக்கணக்குல தரணும்னா சரி. உங்க விருப்பம்மா. ஆனா, எங்களுக்கு அன்னன்னிக்குத் தரதுதான் நல்லதுன்னு...’’

‘‘அப்படியே குடுத்துடுங்க ஐயா... நான் தினமுமே வாடிக்கையா கொணாந்து தரேன். இன்னிக்குத்தான் பூ வியாபாரமே ஆரம்பிச்சேன்யா. மருமவதான் வியாபாரம் செய்வா. ஒடம்புக்கு சரியில்லேய்யா. அதனால நானு வந்தேன். தெரு, தெருவா சுத்த முடியலே. என்னமோ... இங்கே கேக்கணும்னு தோணுச்சு. வத்தி வாசனை வந்துச்சா... சரி... என்னமோ விசேஷம்னு கேட்டுட்டேன்’’ கூறியபடி, கண்களை இப்படியும், அப்படியுமா செலுத்தி, உள்ளே பார்த்தவள்... சந்தோஷத்தோடு புன்னகைத்தாள்.

‘‘ஐயா... நீங்களும் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரைந்தான் கும்புடறீங்களா... மனமே ரொம்பிப் போச்சுய்யா. எம் மருமவ சொல்லிகினேயிருப்பா. வூட்டுல... ஒரு சின்ன படங்களை வச்சுருக்கா. வேளைக்கு ஒரு ஊதுவத்திதான் ஏத்துவோம். எம் பேரன், பேத்தி, எம் மருமவ, கும்புடுவோம். எம் பையன்... ம்... அவனை... இந்த ஆத்தாதான் சரி செய்யணும் சாமி. இனிமேபட்டு, நானே நிதமும் பூக்களைக் கொணாந்து தரேன் சாமி. எம் மருமவ எல்லா வாடிக்கைக்கும் கொடுக்கட்டும். நான் பதிவா தரேன் சாமி. சரியா... இந்த ஆத்தா... நிச்சயமா நல்ல வழி காட்டுவா சாமி’’.

சந்தோஷத்துடன் உள்ளே அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் கும்பிட்டாள். தானே தினமும் பூக்களைத் தருவதாக மீண்டும், மீண்டும் கூறிவிட்டுச் செல்ல... அனைவரின் மனமும் நிரம்பியது சந்தோஷத்தால்.

சத்தியன், சீனு, ராமுவிடம் கூறினார் ‘‘நீங்க படிப்புக்கும் முக்கியத்துவம் தந்து, படிக்கிற நேரத்துல படிக்கணும். காலம்பற நீங்க செய்யிற வேலையை முடிச்சுட்டு, படிக்கலாம். இன்னொண்ணு,



எனக்கு எந்த வேலையுமில்லாததால, நான் சாப்பாடு கொண்டு போறதை செய்யிறேன். சரியா? ஏன்னா... நீங்க காலையில செய்யிற வேலைக்கப்புறம் படிக்க நேரம் இருக்காது. அதனால சொல்றேன். மாமி, நீங்க என்ன சொல்றேள்?’’

‘‘இல்லே... அவா செய்யிற வேலை செய்யட்டும். அவா படிப்பா. அவாளைப்பத்தி நாம கவலைப்பட வேண்டாம். அவாளை இத்தனை நாளும் பார்த்துண்டதே அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும்தானே. அதனால, நாம் எந்த மாத்தத்தையும் செய்ய வேண்டாம்னு நினைக்கிறேன். தப்பா நினைச்சுக்கக் கூடாது. அவா, எப்போதும் போலவேயிருக்கட்டும்... சரியா...’’

சொன்ன மாமியை, இரு கரம் கூப்பியபடி, அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் பார்த்து சாஷ்டாங்கமாய் வணங்கினார். கண்கள் நிரம்பின.

❀❀❀

பூக்களைத் தினந்தோறும் தரும் பாட்டி அன்னம்மாவுக்கும், அவளுடைய மருமகளுக்கும் சந்தோஷம் சொல்லி முடியவில்லை. அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் இன்னும் தீவிரமாய் வணங்க ஆரம்பித்தனர். இப்போது வருமானம் இரு மடங்காக வருகிறதல்லவா? மாமியாரும், மருமகளுமாக பூ வியாபாரம் செய்வது, குழந்தைகளுக்கு வயிறார உணவைத் தர முடிகிறதே. அந்த சந்தோஷத்தில், எப்போதுமே... அவர்கள் மனதில் அன்னையும், ஸ்ரீ அரவிந்தருமே, சுழன்று கொண்டிருந்தனர்.

எப்போதுமே, மகன் தள்ளாடியபடி வந்தால், எந்த ஒரு கோபத்தையும் காட்டாமல், வாசலில் திண்ணையில் உட்கார்ந்து விடுவாள், கண்ணீரைப் பெருக்கியபடி. ஆனால், இப்போது மருமகளும் சரி, இந்தக் கிழவியும் சரி, கண்களைப் பெருக்க விடவில்லை. அதே சமயம் ஒரு மனோதைரியம் இருவருக்குள்ளும் பெருகியதில், அன்னை, தன் மகனை, நிச்சயம் சரியான வழிக்குக் கொண்டு வந்துவிடுவார் என்கிற எண்ணம் ஊடுருவி, இருவரையுமே அந்தக் கவலையை அன்னையிடமே தந்துவிட்டனர். நிம்மதியாக இருந்தனர்.

படித்தவர்களாகிய நாம்தான், எந்த ஒரு காரியத்தையும்,

நிதானமாகச் செய்வதில்லை, யோசிப்பதில்லை. அந்தந்த சமயத்திற்கும், நிலைக்கும் ஏற்றவாறு, நம்மை மாற்றிக் கொள்ளும் ''பச்சோந்தி''யாகத் தானிருக்கிறோம். 'பச்சோந்தி'கூட தன்னைத் தன் எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டே, தன் நிறத்தை, சூழ்நிலைக்கேற்ப மாற்றிக்கொள்கிறது. ஆனால், மனிதர்களாகிய நாம்... நம்மை நாமே நினைத்துப் பார்க்கலாமே.

இன்று ஒரு காரியம், ஒருவரிடம் ஆக வேண்டுமா? ம்... எப்படி வேண்டுமானாலும், நம் ஆதாரமில்லாத நாக்கைப் புரளவிட்டுப் பேசுகிறோம். நம் முகபாவங்களைத் தேர்ந்த நடிகரையும் மிஞ்சுமளவிற்கு மாற்றியபடி பேசுவதில் கில்லாடியாகயிருக்கிறோம். அவர்களின் புறஉணர்விற்கு மதிப்புத் தந்து, நாமும் ஆஹா, ஓஹோவென அவரை அதீதமாகப் புகழ்ந்து, மதித்துப் பேசுகிறோம். அதே, நம் காரியம் கைகூடவில்லையென்றால், அந்த நாக்கின் புரளல், எந்த விதம், எப்படியெப்படி, எங்கே வேண்டுமானாலும் திரும்பும் என்பதில் கடுகளவுகூட சந்தேகமேயில்லாமல் சொல்லலாம். இது மனித இனத்திற்கு மட்டுமே உரிய நீசத்தனமான இயல்பு.

ஐந்தறிவும், நான்கு கால்களுமுள்ள மிருகங்களைவிட, மனித இனம் உயர்ந்ததாகயிருக்க வேண்டுமென, இறைவன் உருவாக்கிய மனித இனத்திற்கு, உபரியாகத் தந்த ஆறாவது அறிவை வைத்துக் கொண்டு நாம் போடும் ஆட்டம்தான் எத்தனை, எத்தனை? ஐந்தறிவு மிருகங்களையும் நாம் விடுவதில்லை. அவைகள் நன்றியுடன் நடந்தாலும், அதை நம் ஆட்டத்துக்குப் பணிய வைத்து, மனிதர்களின் கட்டளைக்கு அடிபணிய வைப்பதில், மிருகங்களுக்குத் தங்களின் பலமே தெரியாமல் மழுங்கடிப்பதிலும், உற்றார், உறவினரை ஏமாற்றுவதிலும்தான் அந்த ஆறாவது அறிவு பயன்படுகிறதோ... என்கிற எண்ணம்தான் இப்போதைய நிலையைப் பார்த்துக் கூறத் தோன்றுகிறது. சாம, தான, பேத, தண்டத்தில், பேத, தண்டத்தை மட்டும் நாம், வெகு சௌகர்யமாக ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்பதுதானே உண்மை. இந்த உண்மையை மறுக்க இயலாது. ஆனால் மறைக்க முடியும் என்பதுதான் எல்லோரிடமுமுள்ள அசட்டு சாமர்த்தியம்.

சிலையாகயிருக்கும் தெய்வங்களையே கடத்தும் துணிச்சல் உள்ள மனிதர்களை, அன்னை நன்கு அறிந்ததால்தான், அவர்



''படமாகவே'' நம்மிடம் இருக்கிறார். நிரந்தரமாகயிருக்கிறார். நம் வழிபாடுகளையும் ஏற்கிறார். நம் எண்ணங்களின், பிரார்த்தனை-களின், சக்தியத்திற்கேற்ப, பலனையும் அள்ளி, அள்ளித் தருகிறார். ஆனால், அன்னை தரும் பலனை, கிள்ளி எடுத்துக் கொள்ளக்கூடத் தெரியாத அறியாமையிலும், ஆத்திரத்திலும், அவசரத்திலும்தான் நாம் இருக்கிறோம்.

அன்னை, தன்னை வணங்குபவர்களை, பணக்காரர்களா, படித்தவர்களா, உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்களா என, எப்போதும் பார்ப்பதில்லை. ஜாதி, மத, இனமென்னும் பேதத்தையெல்லாம் தூரத் தள்ளியவர் அன்னை. மனித இனம் மட்டுமல்ல, மிருகங்களுக்கும் அருள்பாலிப்பவர்.

அன்னை என்றாலே தாய்மையுடையவர்தானே. அந்தத் தாய், நாம் தவறு செய்யும்போது, அதை உணர்த்த கொஞ்சமே கொஞ்சம் கடுமையாக நடத்தலாம். அதைத் தவறுஎனக் கொண்டு, நாம் பெரிதுபடுத்தி, மனதில் கிலேசங்களையும், சங்கடங்களையும் நிறைத்துக் கொண்டு, மறுக்க இயலுமா?

அன்னை என்றாலே நமக்கு 'அம்மா' என்பதுதானே உண்மை. நமக்கு எப்போது, எது தேவை என அம்மாவிற்குத்தானே தெரியும். அந்த உண்மையை நாம் அறிவோம்தானே. அன்னை, எந்தெந்த சந்தர்ப்பத்தில், எதை, எதை... எப்படி... எந்த விதத்தில் தருவார்என நமக்குத் தெரியாது. ஆனால், அது நமக்குத் தேவைப்படும்போது, நாம் எதிர்பாராமல், நல்ல விதத்தில் நம்மை அடையும். இது திண்ணமான உண்மைஎன்பதுதான் நிஜம்.

பூக்காரி... அக்கம், பக்கம் சொல்லியிருப்பாள் போலும். கொஞ்சம், கொஞ்சமாய் 'ஹால்' நிரம்பும் அளவிற்கு தியானத்தின் நேரத்தில் அமர்ந்தனர். அமைதியாக தியானம் செய்து, பூக்களைக் கவரில் போட்டதை, எடுத்துக்கொண்டு அமைதியாகவே வெளியேறினர்.

சிலர் தங்களின் சந்தேகங்களையும், சங்கடங்களையும் கூறி, அதற்கான வழிபாடு எப்படி, எவ்விதம், உணர்ந்து செயல்படவேண்டும் எனக் கேட்டு அறிந்தனர். நாள்கள், மாதங்களாகி, வருடங்களைத் தொட ஆரம்பித்தபோது, தியான மையம் ஓரளவுக்கு பலருக்கும் அறிமுகமாகி, அவரவர் நேரம் கிடைத்தபோதெல்லாம் வர

ஆரம்பித்தனர். அதுவும் தியான நேரத்தில் கூட்டம் அதிகமானது. ஆனாலும், அமைதியும் 'அபரிமித'மாக கோலோச்சியது. இத்தனையிலும் தியான நேரத்தில் தினந்தோறும், தவறாமல் வந்து பிரார்த்தனை செய்தது, பூக்காரக் கிழவியும், அவள் மருமகளுந்தான். இருவரும் மனமுருக வேண்டினார்கள். அதுவும் அன்னையைத் தன் மனதில் ஆத்மார்த்தமாக பிரதிஷ்டை செய்தது, அவர்களையறி-யாமலேயே செய்த அருமையானதாகும்.

❀❀❀

''அம்மா... யம்மோவ்... எங்கே போய் உக்காந்துக்கினு... ம்... யம்மா... ம்மா...''

வயதை நினைக்காமல், மகன் 'அம்மா' என்று கூப்பிடுவதைக் கேட்டு, மனம், மகிழ்ச்சியில் துள்ள, வேக வேகமாய், ஓடாத குறையாய் வந்து நின்றாள். மூச்சு இறைத்தது.

''ஏம்மா... ஏம்மா... இப்டி ஓடியாந்து... மூச்சு எறைக்குது பாரு... மொள்ள வாம்மா... வாம்மா...''

பெற்றவளைப் பிடித்து நிறுத்தினான். அணைத்துக்கொண்டான். ''இந்தாம்மா. துட்டு, இன்னிக்கு சம்பாரிச்சது. ம் பிடிம்மா. பிடிம்மான்னா. சத்தியமா சொல்றேன். நான் சம்பாரிச்ச துட்டுதாம்மா. எடுத்துக்கம்மா''.

பெற்றவளின் கரங்களில் இரண்டு அம்பது ரூபாய் நோட்டுகளை வைத்தவன், அப்படியே அணைத்தபடி உள்ளே சென்றான்.

கையில் இருந்த ரூபாய் நோட்டுகள் இரண்டையும், இரு வினாடிகளில் அன்னையின் பாதங்களுக்கு, தன் மனதிலேயே சமர்ப்பித்தாள். கண்கள் நிரம்பியதை, மகன் அறியாமல் துடைக்குமுன், மகனே தன் கரங்களால் அவள் கண்களைத் துடைத்தான்.

''அம்மா... அழுவாதேம்மா... இனிமேபட்டு, அப்பப்ப, வூட்டுக்கும் துட்டு தரேம்மா... அழுவாதேம்மா...''

அந்தக் கிழவியின் மடியில் படுத்து அழுதான். பிறகு எழுந்தவனை, ''ராசா... சாப்பிட்டியாப்பா... வா... சாப்பிடு...'' என்று தட்டை வைக்க எழுந்தவளையே பார்த்தான்.



''யம்மா... நானு... குடுத்த ரூபாவைத் தாம்மா... அதுல அம்பது ரூவா குடுத்தா போதும்மா... வாயெல்லாம் நமநமங்குது... யம்மா''.

திடுக்கிட்டாள் அன்னம்மா. அன்னையை மனதுக்குள்ளேயே வேண்டினாள். சரி அவன் வழியிலேயே போகலாம் எனத் தோன்றியதை செயல்பட வைத்தாள்.

''சரி கண்ணு. அம்பது ரூவாதானே... தரேம்பா... ஆனா... அதுக்கும் முன்னே, நான் கூட்டிட்டுப் போற எடத்துக்கு கண்டிப்பா வரணும். அப்பத்தான் தருவேன் சரியா...''

யோசித்தவன்... சரி எங்கேதான்னு பார்க்கலாமே எனத் தோன்ற... ஆமோதித்தான்.

''சரிப்பா... மொதல்ல நல்லா குளிச்சிட்டு, சுத்தபத்தமா வாப்பா. பொறவு போலாம். போ... நல்ல துவைச்ச துணியை கட்டிகிட்டு வாப்பா. இனிமே உனக்கு எல்லாமே நல்லபடியா நடக்கும்பா... போ... சீக்கிரம் குளி... ம்...''

நன்றாய் தலைக்குக் குளித்தவன், நல்லபடியாக உடுத்திக் கொண்டு வந்தான். அப்போதுதான் அவன் மனைவியும் பூ மூட்டையை சுமந்தபடி வந்தாள்.

வீட்டிலிருந்த கூடையை, பொட்டலங்களைத் தனித்தனியாய் கூடையில் அடுக்கியவள் மாமியாரிடம் கொடுத்தாள். பாக்கியை தான் எடுத்துக்கொண்டு வெளியேறினாள்... விற்பதற்கு.

''வாப்பா...'' கூடையை இடுப்பில் வைத்தபடி நடந்த பெற்றவளைப் பார்த்தவனின் மனதில் என்ன தோன்றியதோ?

''அம்மா... யம்மா... நான் எடுத்துக்கினு வரேம்மா. ம்... நட...''

நேராக தியான மையத்தை அடைந்தனர். ஊதுவத்தியின் வாசம் அவன் மூக்கை துளைத்தது. 'ம்ம்....' என உள்ளுக்கு இழுத்தான்.

''கோயிலாம்மா... இல்லையே வூடு போலயிருக்குதே...''

''ம்... இத பாரு. உள்ளாற யாரும் பேசவேமாட்டாங்க. இப்ப வாய மூடிகினு வா... வந்து பாரு...''

கூடையைச் சிரிப்புடன் வாங்கியது சத்தியன். உள்ளே உட்காரும்படிக் கையைக் காட்டினார்.

தாயும், மகனுமாய் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தார்கள்.

மகனான குமரன், நான்கு பக்கமும் கண்களை சுழற்றியவன்,

நட்டநடு கூடத்தில் உயிர்ப்புடனிருக்கும் "அன்னை, ஸ்ரீ அரவிந்தர்" படத்தைப் பார்த்தான். அன்னையின் கண்கள் அவனையே தீர்க்கமாகப் பார்ப்பது போல் தோன்ற, திடுக்கிட்டான். அருகிலிருந்த பெற்றவளின் முகத்தைப் பார்த்தான். அவளோ கண்ணிமைகளை மூடியபடி, அப்படியே அமர்ந்திருந்தாள். மீண்டும் அன்னையைப் பார்த்தபோது... அன்னை, அவனைப் பார்த்துப் புன்னகைப்பதுபோல் தோன்றியது. கண்களை, விரல்களால் கசக்கினான். மீண்டும் பார்த்தபோது, இதென்ன... அன்னை இன்னும் அவனையேதான் பார்த்தபடியிருந்ததை உணர்ந்தான். "தப்பா செய்கிறாய்? ம்... ஹும்... நீ... செய்யமாட்டியே... எனக்குத் தெரியுமே" என்று சொல்வதுபோல், கண்களில் தீட்சண்யமும், அதரத்தில் சிரிப்பையும், பார்வையில் கருணையையும் தேக்கியபடி அவனையே பார்ப்பது போலறிந்து திடுக்கிட்டான் மீண்டும்.

திரும்பி, தன்னருகில் அமர்ந்திருந்த பெற்ற தாயின் முகத்தையே பார்த்தான். ஊஹும்... அவள் அசையாமல், தியானத்தில் லயித்திருந்தாள். உடனே அன்னையைப் பார்த்தான். இப்போது, அன்னை அவனது தாயைப் போலவே தோற்றமளித்தார். மாறி, மாறி இருவரையும் பார்த்தவன் மனதும், எண்ணமும், இருவரும் 'தாய்'தான் என்கிற உணர்வு கொஞ்சம் கொஞ்சமாய் வந்தது. அவன் விழிகளும், இமைகளால் தானாகவே மூடப்பட்டன. ஏதும் புரியாத குமரனுக்கு, எதையும் வேண்டத் தெரியாதவனுக்கு, எண்ணங்களோ, புறத்தில் ஏற்படும் சின்னஞ்சிறு சத்தம்கூட காதில் விழாமல், அவனை-யறியாமலேயே, தியானத்தில் ஆழ்ந்தான், அதுவும் தான் செய்வது தியானந்தான் என்பதை அறியாமல்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# வாழ்வின் வண்ணங்கள்

(இவை வாழ்வுக்குரிய உண்மைகள். *Pride and Prejudice* என்ற கதையை விமர்சனம் செய்தபொழுது எழுந்த கருத்துகள் இவை. இந்த நாவல் படித்தவர்க்கு இக்கருத்துகள் அந்நிகழ்ச்சிகளை விவரமாக வியாக்கியானம் செய்யும்.)

1. ஆர்வம் அதிகமாகச் சாதிக்கும். சாதனை சாதிப்பவர் இராசி, சந்தர்ப்பத்தைப் பொருத்தது.
2. வாழ்வில் குறையில்லை. நாம் காணும் குறை, நம்மிடம் உள்ள குறையைப் போக்க வெளிப்படுவதாகும்.
3. எந்தக் காரியமும் முடிவில் நல்லதாக முடிவது வாழ்வின் அம்சம்.
4. பாராமுகமாக இருப்பவர்கள் சாதிப்பது அதிகம்.
5. அவசரப்படுபவர் அனைத்தையும் கலக்கி, கெடுத்து, முடிவாகச் சாதிப்பார்கள்.
6. சாதனை அனைவர்க்கும் உரியது. சாதிக்காதவர் உலகில் இல்லை. என்ன சாதித்தார், எப்படிச் சாதித்தார்என்பது அவர் பர்சனாலிட்டி - இராசி - யைப் பொருத்தது.
7. கெட்டதைக் கெடுத்தால் பெரிய நல்லது விளையும்.
8. நாம் இன்று நாடுவது நம் மனதிலுள்ளது.
9. தேடாதவரின் தேவை அவரை நாடி வரும்.
10. நல்லெண்ணம் செயலை உயர்த்திப் பலிக்க வைக்கும்.
11. கெட்ட செயலும் கெட்ட எண்ணமில்லாவிட்டால் நல்லதை விளைவிக்கும்.
12. நாம் இல்லையென ஏங்குவது நமக்காகக் காத்திருக்கும். நாம் அதை அறிவதில்லை.
13. உள்ளதை உலகமே எதிர்த்தாலும் விலக்க முடியாது.
14. அனைவர் உடலும் ஓர் உடல் என்பதை மின்னலாகப் பரவும் வதந்தி கூறுகிறது.
15. சாப்பிடுவதும் தூங்குவதுமே கடமையென்பவரும் சாதிக்கிறார்.
16. உள்ளத்தின் காதல்தீ உலகில் எவரும் அறியாமலும் வளரும்.
17. கூர்ந்த பார்வைக்கு எந்த இரகஸ்யமும் தப்பாது.
18. எதிரியென நாம் கருதுபவர் நம்மை விரும்பி ஏற்பவர்என்று நாமறிவதில்லை.
19. எவர் மனதில் தீவிரமாக இருக்கும் செய்தியும் எவர் வாயாலும் வெளிவரும்.
20. தேவை மிஞ்சும்பொழுது அசிங்கம், அசிங்கமாகத் தெரிவதில்லை.
21. சொல் வெளியிடாததைச் செயல் வெளியிடும்.
22. ஒருமுறை ஆசை எழுந்தபின் அதைப் பற்றி அந்த நெஞ்சில் வெறுப்பு எழாது.
23. அழிச்சாட்டம் செய்பவன் அசத்தை சத்தாக மாற்றுபவன்.
24. முதற்சொல் முடிவானசெயலைப் பற்றியது.

(பின்பக்க அட்டையில் தொடரும்...)

# வாழ்வின் வண்ணங்கள்

(முன்பக்க அட்டையின் தொடர்ச்சி...)

25. எந்தத் திறமையும், பொறுப்புமில்லாதவனுக்கு எல்லாத் திறமைகளின் பலன் வருவதுண்டு.
26. வேண்டாத செயலை உயிர்ப்பிக்க உடலில் அனைத்தும் துடிக்கும்.
27. பெற்றோர் நினைவைப் பிள்ளைகள் தம்மையறியாமல் பூர்த்தி செய்வார்கள்.
28. பெருவசதியிருந்தால், சிறுபிரச்சினையும் பிரம்மாண்டமாக மாறும்.
29. சிறுகுறை பெரியதானால், வசதி அதிகம்எனப் பொருள்.
30. சரளமாகப் பேசுபவன், பேச்சோடு முடிப்பான்.
31. பேசாதவன் அனைத்தையும் ஆழ்ந்து சாதிப்பான்.
32. *Pride and Prejudice*இல் முழுச் சாதனையும் Mrs.பென்னட்டிற்கே உரியது.
33. உடலின் தேவை உரசும்.
34. எழுந்த சொல் மீண்டும் உள்ளே போகாது.
35. கணவனைவிட சொத்து முக்கியம்.
36. பணத்தைவிடப் பெண் முக்கியம்.
37. தாயையறியாதவள் ஏங்குவது தாயிக்கு.
38. இடம் பெரியதானால் மடம் பெரிதாகும்.
39. சொத்தை சம்பாதித்தவன் அனுபவிக்கும் அளவுக்கு அங்குள்ளவனும் அனுபவிப்பான்.
40. போற்றுதல் பெருமையை அனுபவிப்பது.
41. தூற்றுதல் ஆழ்ந்த தவற்றை அனுபவிப்பது.
42. பணத்தைக் கண்டவன் அனுபவிக்காமலிருக்க மாட்டான்.
43. கர்வம் அந்தஸ்தை ஆழ்ந்து பூரணமாக அனுபவிப்பது.
44. கடமையை உணர்ந்தால் தானே தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும்.
45. கொடுக்காமல் பெற முடியாது.
46. பெறாமல் கொடுக்க முடியாது.
47. தழலாக எரியாதது காதலில்லை.
48. காதல் நாடுவது காலத்திற்கும் ஆனந்தம், திருமணமில்லை.
49. திருமணத்திற்குப்பின் காதல் திருவுருமாற்றத்திற்குண்டு.
50. காலையில் பிறந்து மாலையில் அழிவது காதலாகாது.
51. காதல்பிறப்பு வாழ்விலில்லை, ஆத்மாவில்.
52. பரந்த மனம் பெரிய சொத்து.
53. சொத்தின் அளவை நிர்ணயிப்பது மனத்தின் பண்பின் ஆழம்.
54. அர்த்தமற்றவனின் அர்த்தம் விளங்குவது பிரம்மம் பிடிபடுவது.
55. கெட்டவன் கெடுதலைக் களைபவன்.
56. பொறுக்க முடியவில்லைஎன்பது உள்ளமும், உலகமும் ஏற்காதது, இல்லாததில்லை.

❀ ❀ ❀

October 2009 Jiviyam 15 Malar 6
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம்** (பாகம் 2) ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-

*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-

**(CONCISE TRUISMS)**

**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191